Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

பான் 389

தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம பிலவ மாசி 12 ஆம் நாள் ரம்ழான் 17 (23 2-62) வெள்ளிக்கிழமை இதழ் 13

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# ஐ.ஜி.பி.யின் உத்தரவை அமுல் நடத்தினர்

## திஸ்ஸநாயக்கா பற்றி பார்லிமெண்டில் ஜே.ஆர்.

### "பிரதமரிடமென்று கூறி சிறைக்கு கொண்டுசென்றனர்"

கொழும்பு, வியாழன்

★ பிரதமரின் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக 'டெம்பிள்ட் ரீஸுக்கு' அழைத்துச் செல்வதாகக் கூறி வெலிக்கடை சிறைச்சாலைக்கு உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸி. ஸி. திஸ்ஸநாயக்கா அழைத்துச் செல்லப்பட்டார்.

★ பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்தரவின்படி திரு. திஸ்ஸநாயக்கா நடவடிக்கைகள் எடுத்தார். கலகம் அடக்கும் பிரிவு, ஆயுதப் பிரிவு ஆகியவைகளுக்கும் ஐ. ஜி. பி. க்கும் அரசாங்கத்துக்கும் தெரியக் கூடியதாகவே அவர் உத்தரவு பிறப்பித்தார்.

★ வழக்கறிஞரை ஏற்படுத்தும்படி மனைவிக்கு எழுதிய கடிதம் மனைவிக்கு அனுப்பப்படவில்லை.

★ விரைவில் விடுதலை செய்யப்படுவதாக திஸ்ஸநாயக்காவுக்கு நிதிமந்திரி வாக்களித்தார்.

இந்த விபரங்களை கொழும்பு தெற்கு முதலாவது எம். பி. திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று பார்லிமெண்டில் வாசித்த ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

ஜனப்பிரதிநிதிகள் சபை, சபாநாயகர் திரு ஆர். எஸ். பெல்பொல தலைமையில் இன்று பிற்பகல் கூடியது.

கேள்விநேரத்தின்பின் கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதாவை ஷரத்துவாரியாகப் பரிசீலனை செய்வதற்காக சபை கமிட்டியாக மாறியது.

மசோதாவின் இரண்டாவது ஷரத்துக்குத் திருத்தத்தைக் கொண்டுவந்து திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன வ்வாதத்தை ஆரம்பித்துவைத்தார். திரு. ஜயவர்த்தன பேசுகையில் ஒரு அறிக்கையை வாசித்தார். அந்த அறிக்கை வருமாறு:-

#### சில நிமிஷங்கள் பேச அனுமதி

நேற்று (20-2-62) காலை 10 மணிக்கு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள திரு. ஸி. ஸி. திஸ்ஸநாயக்காவை திருவாளர்கள் ஈ. ஜி. விக்கிரமநாயக்கா, ஆர். ஏ, கன்னங்கரா, ஏ. எல். குணசேரா ஆகியோர் சந்தித்தனர். திருவாளர்கள் ஏ. வி. டி' சில்வா, எம். ஜே பெரேரா, விமலரத்தின ஆகியோரைக்கொண்ட ஆலோசனைச்சபைமுன் திரு. திஸ்ஸநாயக்கா ஆஜர்செய்யப்பட்டபோதே அவர்கள் சந்தித்தனர். தடுப்புக்காவல் கைதியான அவருடன் பேசுவதற்கு ராணுவ, சிறை அதிகாரிகள் அனுமதியளிக்க மறுத்துவிட்டனர். திரு. ஈ. ஜி. விக்கிரமநாயக்கா அளித்த வாக்குறுதியின்மீது ஆலோசனைச்சபைமுன் தனது கோரிக்கையைத் தெரிவிப்பதற்குமுன்பாக திரு. திஸ்ஸநாயக்காவுடன் சில நிமிஷங்கள் பேசுவதற்கு அவர்களுக்கு (வழக்கறிஞர்களுக்கு) அனுமதி வழங்கப்பட்டது.

1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந் திகதி ஆலோசனைச்சபைக்கு அவர் (திரு. திஸ்ஸநாயக்கா) எழுத்துமூலம் கொடுத்த அறிக்கையின் பிரதியும் அவர்களுக்கு (வழக்கறிஞர்களுக்கு) காண்பிக்கப்பட்டது இச் சந்திப்பின் பின் ஆலோசனைச்சபைமுன் திரு. திஸ்ஸநாயக்கா ஒரு வாக்குமூலமளித்தார். இந்த வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது

#### திஸ்ஸநாயக்கா கூறிய விபரம்

ஆலோசனைச்சபைமுன் திரு. திஸ்ஸநாயக்கா தெரிவித்தவைகளிலிருந்தும், ஆலோசனைச் சபைக்கு அவர் எழுத்துமூலம் விடுத்த அறிக்கையிலிருந்தும் நாம் தெரிந்துகொண்டுள்ள விபரங்களைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:-

1. கைதுசெய்யும் உத்தரவோ, காவலில் வைப்பதற்கான உத்தரவோ இன்றி 1962-ம் ஆண்டு ஜனவரிமாதம் 23-ந் திகதி காலை அவர் (திரு. திஸ்ஸநாயக்கா) கைதுசெய்யப்பட்டார். அவரது வீடும் 'வாரண்ட்' இல்லாமலே சோதனையிடப்பட்டது.

பிரதமமந்திரியுடன் ஒரு மகாநாட்டுக்கு அழைத்துச்செல்லப்படுவதாகத் தெரிவித்து, 'ஜீப்' வண்டியில் ஏறியபின் 'டெம்பிள்ட்ரீசுக்' கொண்டுசெல்லப்படுவதான பாசாங்கில் அவர் (திரு. திஸ்ஸநாயக்கா) வெலிக்கடைச்சிறைச்சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைச்சந்திப்பதற்கு அனுமதியளிக்கும்படி 28, 29-ம் திகதிகளில் சிறை அதிகாரிகளை மீண்டும் மீண்டும் அவர் கோரிக்கைவிடுத்தும் அவரின் கோரிக்கைக்கு செவிசாய்க்கப்படவில்லை. ஆலோசனைச்சபைக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாமென்று 29-ந் திகதி அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே எனக்குத்தெரிந்த விபரங்களைக்கொண்ட ஒரு முழு அறிக்கையை அவர் ஜனவரி 30-ந்திகதி ஆலோசனைச்சபைக்கு சமர்ப்பித்தார்.

#### அவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது

(அ) பொது வேலைநிறுத்தம் ஒன்று உடனடியாக நிகழக்கூடுமென்றும் இந்த வேலைநிறுத்தத்தைத் தவிர்ப்பதற்கும் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கும் அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் பொறுப்பு திரு. திஸ்ஸநாயக்காவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக ஜனவரி 27-ந் திகதிக்கு சில தினங்களுக்குமுன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவரிடம் (திரு. திஸ்ஸநாயக்கா) அறிவித்திருக்கிறார்.

(ஆ) இதன்பலனாக கலகம் அடக்கும் பிரிவு, ஆயுதப்பிரிவு, போக்குவரத்துப்பிரிவு, பாதுகாப்புப்பிரிவு ஆகியவைகளுக்கு திரு. திஸ்ஸநாயக்கா, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் அரசாங்கத்துக்கும் தெரியக்கூடியதாக உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறார்.

(இ) 27-1-62-ல் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. திஸ்ஸநாயக்காவுக்கு விடுத்த ஒரு உத்தரவில், அன்றிரவு அவர்கள் தயாராக இருக்க வேண்டுமென்று தெரிவித்தார். லயனல் வென்ட் தியேட்டரில் நடைபெறவிருந்த ஒரு 'நாடகம், பொலிஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரலின் உத்தரவின்மீது ரத்துச்

( 8-ம் பக்கம் பார்க்க )

## உதவி மேயருக்கு தனியாக ஒரு காரியாலயம்

### முதல்தடவையாக யாழ்ப்பாண மாநகரசபையில் இடம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகரசபையின் சரித்திரத்தில் முதன்முதலாக நேற்று உதவி மேயருக்கென மாநகரசபையில் ஒரு காரியாலயம் திறக்கப்பட்டிருக்கிறது. மேயர் திரு.எம். ஜேக்கப் இக்காரியாலயத்தைத் திறந்துவைத்தார்.

இத்திறப்புவிழா வைபவத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஏ. டி. துரையப்பா மாநகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேயர் தமது திறப்பு விழா உரையில் பின்வருமாறு தெரிவித்தார்:

"மாநகரசபைநிர்வாக இயந்திரம் திறம்பட இயங்கவேண்டுமானல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படல்வேண்டும், இந்த வகையில் சகலருக்கும் சமசந்தர்ப்பம் அளித்து ஜனநாயக முறையாக நடந்துகொண்டாலேயே மக்களுக்கு சேவை செய்ய முடியும். இதனை ஒவ்வொரு அங்கத்தவரும் உணர்ந்து செயலாற்றவேண்டும்."

ஹாஜி வி. எம்.எம். அபுசாலி பேசுகையில் கூறியதாவது:-

"மாநகரசபையில் அங்கத்தவர்கள் ஒத்துழைப்புநல்கி நிர்வாகத்தைச் சிறப்புடன் ஜனநாயகரீதியில் நடாத்த நாமும் வாழ்ந்து மற்றவர்களையும்வாழவைக்கவேண்டும். இந்த நோக்கை அடிப்படையாக வைத்து அங்கத்தவர்கள் சேவைசெய்யவேண்டும்"

உதவிமேயர் திரு. ஏ. துரைராசசிங்கம் தமது கடமைகளை இப்புதுக்காரியாலயத்தில் திங்கட்கிழமை ஆரம்பிக்கவிருக்கிருரெனத் தெரிகிறது. உதவிமேயர் பேசுகையில் இவ்வாண்டின் முக்கிய மாற்றங்களில் உதவிமேயருக்கு காரியாலயம் தனியே ஏற்பாடுசெய்ததும் என்றென்றும் இவ்வாறே பல முன்னேற்றங்கள் இனிமேல் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்றும் கூறினர்.

## அரசாங்க கட்சி கூட்டம்

கொழும்பு, வியாழன்

இன்று காலை அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டம் திரு. சி. பி. டி' சில்வா தலைமையில் நடைபெற்றது. பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்)மசோதாவுக்கு எதிர்க்கட்சியினர் கொண்டுவரவிருக்கும் திருத்தங்கள்பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பாணவு, கருவாடுபற்றியும் கூட்டம் பரிசீலனைசெய்தது.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவில் இந்து சமய அபிவிருத்திச் சங்க ஆதரவில் கொக்குவில் கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமி கொவில் மண்டபத்தில் இன்று இரவு 7 மணிக்கு யோகிராஜ் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தா 'இறை வழிபாடு' என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கலைப்புலவர் காலமானர்

யாழ்ப்பாணம், வெள்ளி

கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் காலமானர் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவிக்கின்ளேம். திடீரென சுகவீனமுற்றதால் நேற்றிரவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். விசேஷசிகிச்சைகள் செய்தும் குணமடையாமல் அவர் மறைந்தார். அவரது பூதஉடல் இன்று 23-ந்திகதி வெள்ளிக்கிழமை மாலை பி. ஏ. தம்பி ஒழுங்கையிலுள்ள சாந்திநிகேதத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்.

## தோம்பேயிலே தேசிய சேவை

தோம்பே, வியாழன்

பாடசாலைகள் தேசிய சேவைத் திட்டத்தின் கீழ் நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் தொகுதியான தோம்பே தொகுதியில் வீதி அமைக்கும் வேலையொன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கவிருக்கும் இத்திட்டத்தினல் அரசாங்கத்துக்கு ஐந்து லட்சம் ரூபாய் மிச்சப்படுமெனக் கருதப்படுகிறது.

# ஆசிரியர் உள்ளவரை ஆசிரிய சங்கங்களின் சேவை அவசியம்

## அ. இ. த. ஆசிரியர் சங்க 15-வது வருடாந்த நிர்வாக அறிக்கையில் வற்புறுத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

"மொழி வேறுபாடற்ற சம சம்பளம் வழங்கப்படவேண்டுமென்ற சங்கத்தின் நீண்டகாலக் கோரிக்கையை வில்மட் பெரேரா கமிஷன் அங்கீகரித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு நிகழ்ச்சியாகும். இவ்வறிக்கையில் சில குறைபாடுகள் இருப்பினும் சுயமொழி ஆசிரியர்களின் அந்தஸ்தை உயர்த்தும் வகையில் அமைந்திருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை"

இவ்வாறு அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க 15-வது வருடநிர்வாக அறிக்கையில் சங்கப் பொதுக் காரியதரிசி தெரிவித்துள்ளார். இச்சங்கத்தின் 15-வது வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 24-ம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் இந்த நிர்வாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சென்ற ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்கத் தீர்மானித்தபோது ஆசிரியர்களின் பிரச்சினைகள் யாவும் தீர்ந்துவிடும், இனி ஆசிரிய சங்கம் அவசியமில்லையெனக் கருதியவர்கள் இன்று ஏமாற்றம் அடைந்திருக்கிருர்கள். ஆசிரியர்கள் உள்ளளவும் ஆசிரிய சங்கங்களின் சேவை அவசியமென்பதை யாரும் மறுக்கமுடியாது. மற்றவர்கள் செய்யட்டும் நாம் அனுபவிப்போம் என்னும் மனப்பான்மை மாறி எல்லாத் தமிழாசிரியர்களும் ஒன்றுபட்டு உழைக்கும் காலம் வந்தால் நமது பிரச்சினைகள் இலகுவில் தீர்ந்துவிடும்.

எட்டாம் வகுப்பு இலக்கிய பாடத்திற்காகச் சங்கம் வெளியிட்ட தொகுப்பு நூலை அங்கீகரிக்க தமிழ்ப்பாட நூற்குழுவிலிருந்த தமிழறிஞர்கள் மறுத்துவிட்டனர். அதன்பின் நூலிலுள்ள குறைகளெவையென எழுத்துமூலம் பெற்று அந்நூலைத் திருத்தி வெளியிட ஓர் உபசபையை நியமித்துள்ளோம்.

நமது சங்கத்தில் 50 வீதத்திற்குக் குறைந்த தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் அங்கம் வகிப்பதே நாம் இவர்களது பிரச்சினைகள் சம்பந்தமாக முதலிமார் சம்மேளனத்துடன் கோரிட முடியாதுபோனமைக்குக் காரணம் என்பதை வருத்தத்துடன் குறிப்பிடவிரும்புகிறேன்.

அரசாங்க பாடசாலைகளிலும், வித்தியாபகுதியின்கீழ் வந்துள்ள பாடசாலைகளிலும் காலியான இடங்களிருந்தும் இவற்றிற்குப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை நியமிக்காமலிருப்பது பெரும் அநியாயமாகும்.

---

## இலங்கையில் உரை நிகழ்த்த பிரிட்டிஷ் விஞ்ஞானி

பிரிட்டனில் நுண்தொழில் கூட்டுறவு இலாகாவின் விஞ்ஞான ஆலோசகரான டாக்டர் டபிள்யு. ரயில்ஸ்ரன், பெப்ரவரி 27-ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் கொழும்பு தேஸ்ரன் வீதியிலுள்ள இலங்கை சர்வகலாசாலையின் இரசாயனக் கூட்டத்தில் விஞ்ஞான முன்னேற்ற இலங்கைச்சபை ஆதரவின் கீழ் "விஞ்ஞான நுண்தொழிலில் பிரிட்டனும் முன்னேறும் நாடுகளும்" என்ற பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்.

கொழும்புத் திட்டத்தின் கீழுள்ள பிரிட்டிஷ் திட்டங்கள் பற்றி இலங்கைக்கு ஆலோசனை கூற வந்துள்ள டாக்டர் ரயில்ஸ்ரன், பௌதிக சபையினதும் பௌதிக நிலையத்தினதும் கழக அங்கத்தினராகும்.

இதற்கு முன் இவர் டர்ஹம் சர்வகலாசாலையில் பௌதிக விளக்குவோராகவும் லண்டன் செண்ட் ஜோன்ஸ் காஸ நுண்தொழில் பாடசாலையின் பௌதிக உரையாளராகவும் ஷ்ரிவன்ஹம் ரோயல் இராணுவக் கல்லூரியின் முக்கிய பௌதிக உரையாளராகவும் கடமையாற்றினர்.

1958-ம் ஆண்டு முடிவில் முன்னொரு முறை இலங்கைக்கு வந்திருந்தபோது டாக்டர் ரயில்ஸ்ரன் கொழும்பு பேராதனை விஞ்ஞான பட்டதாரிகளுக்கும்; கல்வி இலாகாவின் ஆசிரியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உரை நிகழ்த்தினர்.

---

## ஒரு நாளைக்கு ஒரு மணி நேர லீவு

### அரசாங்க ஊழியருக்கு வழங்கப்படும்

கொழும்பு, வியாழன்

காரியாலய நேரத்தின்போது படிப்பதற்காக வகுப்புகளுக்குச் செல்லும் அரசாங்க ஊழியருக்கு ஒருநாளைக்கு, ஒரு மணி நேரத்துககு அதிகமாக படிப்பு லீவு வழங்கப்படக்கூடாது என திறைசேரி உததரவிட்டுள்ளது.

படிப்பதற்காக வகுப்புகளுக்குச் செல்லும் அரசாங்க ஊழியர், அவர்களது படிப்பு லீவை காலை 10 மணிக்கு பிந்தாமலும் பிற்பகல் 3-30 மணிககு முந்தாமலும் எடுக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

காரியாலய தலைவர்களுக்கு அனுப்பியுள்ள ஒரு சுற்றறிக்கையில், திறைசேரியின் காரியதரிசி இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

---

## காணமற் போன அபேட்சகர்

### இதுவரை 100 பேர் வாக்குமூலம் பதிவு

லுதியானா, பெப். 22

லுதியானா அசெம்பிளி தொகுதிக்குப் போட்டியிடும் சுயேச்சை அபேட்சகர் ஸ்ரீ பாஸன்சிங் பெப். 6 முதல் காணமற் போனது சம்பந்தமாக பொலிஸார் இதுவரை சுமார் 100 நபர்களைப் பதிவு செய்தனர்.

பெப். 6-ந் திகதியன்று ஸ்ரீ பாஸன்சிங் லுதியானாவிலிருந்து அம்பாலாவுக்குச் சென்றைதத் தாங்கள் கண்டதாக மூன்று நபர்கள் ஊர்ஜிதம் செய்தனர். இதுசம்பந்தமாக பல்வேறு பொலிஸ இலாகா வட்டாரங்களின் புலன் விசாரணைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பெப். 7, 8 திகதிகளில் ஹிஸாரிலோ அன்றி பிரோஸபூர் ஜிர்க்காவிலோ ஸ்ரீ பாஸன் சிங்குக்காக பொதுக் கூட்டம் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்று நம்பகமாகத் தெரிவாதக பொலிஸ அதிகாரியொருவர் கூறினர்.

---

சங்கானைப் பட்டினசபை

## தலைவர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

சங்கானை, புதன்

சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. என். முத்தையாவுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதாக சபை அங்கத்தவர் நால்வர் ஸ்தலஸ்தாபன உதவி அதிபருக்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கிருர்கள். இந்தப் பிரேரணையைப் பரிசீலனை செய்வதற்காக இச்சபையின் விசேஷ கூட்டத்தைக் கூட்டுமாறு குறிப்பிட்ட நான்கு அங்கத்தவர்களும் கேட்டுள்ளனர் திருவாளர்கள் கே அம்பலவாணர், ஏ. கே. அழகசுந்தரம், என். சபாரத்தினம், வி. சுப்பையா ஆகியோரே மேற்படி அங்கத்தவர்களாவர்.

---

## உங்கள் தினப் பலன்

சோதிடஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு மாசிமாதம்12ந் தேதி வெள்ளிக்கிழமை (23-2-62) இரவு 2-52 வரை சதுர்த்தி. பகல் 2-38 வரை அத்தம். பின் சித்திரை. அமிர்தசித்தயோகம். முகூர்த்த தினம். வர்த்தகத்திற்குச்சிறந்த நாள்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இத்தினத்திற் பிறந்தவர்களுககு நல்வினச் சேர்க்கையும், இலாபகரமான முயற்சிகளில் ஈடுபடலும், குடும்பநலன்களும் பிற இட பிரயாணங்களும் காணபபடுகின்றன. கடற்பிரயாணமும் இருக்கும். இடையிடையே தேகநலத்தைப்பேணிக் கொள்ளவேண்டும். ஆவணி, புரட்டாதி மாதங்கள் பணவரவில் நன்ருக இருக்கும். வர்த்தகத்துறையினருக்கு மத்திமமான பலன்களுண்டு. கல்வி பயில்வோருக்கும், உத்தியோகத்தினருக்கும் பெண்களுக்கும் சிறப்பான பலன்கள் நடக்கும். விவாகப்பேறுகளுக்கும் சுபகருமங்களுக்கும் இடமுண்டு.

### நட்சத்திரப்பலன்

அச்சுவினி: தொழில் நன்மை, பணவரவு.

பரணி: குடும்பசுகக் குறைவு, பணச்செலவு

கார்த்திகை: தொழில் நன்மை, கடும்உழைப்பு.

ரோகிணி: பகைவா தொல்லை, சஞ்சலம்.

மிருகசீரிடம்: ஊழியர்உதவி, மேன்மை

திருவாதிரை, புகழ், பணவரவு

புனர்பூசம்: குடும்பநலக் குறைவு, செலவு.

பூசம்: பெரியோர் நட்பு, தெய்வ வழிபாடு.

ஆயிலியம்: அனவசியகவலைகள், கடன்.

மகம்: உழைப்புக்கேற்றஊதி

(5-ம் பக்கம் பார்க்க)

---

## யாத்திரீகர்கள் பாடசாலைகளை உபயோகிக்கலாம்

கொழும்பு, வியாழன்

கல்விசம்பந்தமாக சுற்றுப்பிரயாணம் செய்யும் கோஷ்டிகளும், யாத்திரீகர்கள் கோஷ்டிகளும் இரவுவேளையில் தங்குவதற்கு பாடசாலை மண்டபங்களை இனிமேல் பாவிக்கலாம். இதுசம்பந்தமாக எல்லா அரசினர் பாடசாலைகள் தலைமை ஆசிரியர்களுக்கும் கல்வி அமைச்சு ஒரு சுற்றறிக்கையில் தெரியித்துள்ளது.




ஒட்டகத்துக்குக்கூட தன்னுடலில் ப்ரோட்டீன் சேமிக்க முடியாது!

அனுதினம் உங்களுக்கு ப்ரோட்டீன் தேவைப் பட்டபோதிலும், உங்கள் தேகம் ப்ரோட்டீனை சேமிக்க சக்தியற்றது. ப்ரோட்டீனையே தினமும் உங்கள் தேகம் எரித்து, தேக வளர்ச்சிக்கும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு ஸெல்களை சரிபடுத்துகின்றது. தினமும் உங்களுக்குப் போதுமான ப்ரோட்டீன் கிடைக்காவிடில் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத்தானே எரித்துக்கொள்கிறதோ, அது போலவே சீக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.




ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானால், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.




ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டினுக்கு, அனுதினம் ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஓப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.

ப்ராண்ட்ஸ்

எஸன்ஸ் ஓப் சிக்கன்

AT-7124






மேல்படம்: அமெரிக்க வானவெளி வீரர் ஜோன் கிளன். வானவெளிப் பயணத்துக்கானஉடையுடன் காணப்படுகிறர். கீழே: 'நட்புறவு7 'என்றவானவெளிக்கப்பலில் கிளன் ஏறிக் கொண்டிருக்கிறர். அமெரிக்காவின் முதலாவது வானவெளிப் பிரயாணியான ஜோன்கிளனுக்கு உலகெங்குமிருந்து பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

# 'ஜெனிவா மகாநாட்டுக்கு இப்போது வரமுடியாது'

## திரு. குருஷ்சேவுக்கு நேரு அறிவிப்பு

புதுடில்லி, பெப். 22

தேர்தல்கள் நடைபெற்றுவருவதாலும், தாம் புதிய அரசாங்கத்தை அமைக்கவேண்டியிருப்பதாலும் மார்ச் 14ந்-தேதி ஜெனிவா வருவது சாத்தியமில்லையென இந்தியப்பிரதமர்நேரு, சோவியத் பிரதமர் குருஷ்சேவுக்கு அறிவித்திருக்கிறர்.

18 நாடுகளின் ஆயுதப்பரிகரண மகாநாட்டில் அந்நாட்டின் தலைவர்கள் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்என்று திரு. குருஷ்சேவ் யோசனை தெரிவித்து, நேருஜிக்கு எழுதிய கடிதத்திற்குப் பதிலளிக்கையிலேயே இந்தியப் பிரதமர் இவ்வாறு கூறியிருந்தார்.

இவ்வித மகாநாட்டில் பங்குபற்றிக்கொள்ளத் தாம் விரும்பியபோதிலும், மார்ச்14ந்தேதிக்குப்பின் ஒருதேதியில்குறித்த மகாநாட்டைநடத்தினல் அதிற் பங்குபற்றிக்கொள்ள முடியுமென்றும் திரு. நேரு அறிவித்திருக்கிறர். திரு. குருஷ்சேவின் பூரண ஆயுதப்பரிகரண யோசனையைத் தாம் ஏற்றுக்கொள்வதாயும் நேரு தம் கடிதத்தில் தெரிவித்திருக்கிறர்.

திரு. குருஷ்சேவ் நேருவுக்கு எழுதியிருந்த கடிதத்தில் 18 நாட்டுத் தலைவர்கள் மகாநாடு உண்மையில் பலவிஷயங்களையும் விவாதிக்கும் உச்சிமகநாடாக இருககாதென்றும், ஆயுதப்பரிகரணம் பற்றி மட்டுமே அதுவிவாதிக்கும் என்றும் கூறியிருந்தார்.

### இன்று யாழ்ப்பாணத்தில் இசைவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீ தியாகராஜா சுவாமிகள் உற்சவ இசைவிழா இன்று வண்ணை நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் ஆரம்பமாகின்றது. இந்த இசைவிழா மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

முதல்நாள் நிகழ்ச்சிகளுக்கு வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமை தாங்கித் திறப்புரை வழங்குகிறர்.

இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் இசைவிழா இரவு 10 மணி வரை நீடிக்கும். பல கலைஞர்களின் இசைக் கச்சேரிகள் இன்று நடைபெறவிருக்கின்றன.

### சந்திரனுக்கு ஐரோப்பிய ராக்கெட்

பாரிஸ், பெப். 22

12 நாடுகளடங்கிய ஐரோப்பிய வானவெளி ஆராய்ச்சி ஸ்தாபனம் ஒன்று இங்கு அமைக்கப்பட்டது. 1970-ம் ஆண்டு சந்திரனுக்கு ஐரோப்பிய ராக்கெட் ஒன்றை அனுப்புவதும் அதன் நோக்கங்களில் ஒன்று.

### பிரான்ஸ் அங்கீகாரம்

பாரிஸ், பெப். 22

அல்ஜீரிய போர் நிறுத்த ஒப்பந்தத்தை பிரெஞ்சு பார்லிமெண்ட் அங்கீகரித்துவிட்டது. இப்போது டிரிப்போலியிலுள்ள அல்ஜீரிய தேசிய பார்லிமெண்டின் அங்கீகாரம் மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆசிரியர் வழக்கறிஞரானர்

கொழும்பு, வியாழன்

முன்னர் பத்திரிகையாசிரியராகவிருந்த திரு. கே. ஜெகநாதன் அண்மையில் வழக்கறிஞரானர். சட்டக்கல்லூரியில் இருக்கும் சமயம், திரு. ஜெகநாதன் சட்டமாணவர்கள் யூனியனது பத்திரிகைக்கு ஆசிரியராகவிருந்தார்.

## பாகிஸ்தானில்தியாகிகள்தினம்: 5000 மாணவர் ஊர்வலம்

கராச்சி, பெப். 22,

பாகிஸ்தானில் நேற்று தியாகிகள் தினம் அனுஸ்டிக்கப்பட்டது. 10 வருடங்களுக்கு முன் கிழக்கு பாகிஸ்தானில் மொழி கிளர்ச்சியின் காரணமாக உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாக இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

டாக்காவில் 5000 மாணவர்கள் கலோக அட்டைகளுடன் ஊர்வலமாகச் சென்றனர்.

எல்லா அரசியற் கைதிகளையும் விடுவிக்குமாறும், தியாகிகள் தினத்தை தேசியவிடுதலையாகப் பிரகடனஞ் செய்யுமாறும் அவர்கள் கோஷமிட்டனர்.

## இந்திய தேர்தலில் பலமான வாக்குப்பதிவு

### ஓரிடத்தில் 100 சத விகிதம் வாக்களிப்பு

புதுடில்லி, பெப். 22

9ராஜ்யங்களில் நேற்று நடைபெற்ற தேர்தலில் வாக்குப்பதிவு பலமாக இருந்தது. மேற்கு வங்காளத்தில் ஓரித்தில் 100 சதவிகிதம் வாக்களிக்கப்பட்டது.

ராஜஸ்தானில் 90 சதவிகிதமானேர் வாக்களித்ததாய் அறிவிக்கப்படுகிறது. முஸ்லிம்கள் பெருவாரியாக வாக்களித்தனர். கிராமப்புறங்களில் 50சதவிகிதத்துக்கும் 60 சதவிகிதத்துக்குமிடையே வாக்களிக்கப்பட்டது. அஹமதாபாத்தில் சபர்மதி என்னுமிடத்தில் 91 சதவிகித வாக்காளர் வாக்களித்தனர்.

ஆந்திரப் பிரதேசத்தில் தெலிங்கானஜில்லாவில் ஏராளமானேர் வாககளித்தனர்.

மத்தியபிரதேசத்தின்நாடோடிகள் அடங்கிய விடுதியில் 44 சதவிகிதமானேர் வாக்களித்தனர். பீகாரில் நாடோடிகள் வாழும் பகுதியிலும் பெருவாரியானேர் வாக்களித்தனர்.

இன்று 5 ராஜ்யங்களில்தேர்தல்கள் நடைபெறுகின்றன.

காஷ்மீரில் வாக்குப்பதிவு 2?-ம்தேதிஆரம்பமாகி அன்றே முடிவுகளும் அறிவிக்கப்படும். பிப்ரவரி 25ம்தேதிக்கும் மார்ச் 1ம் தேதிக்குமிடையே எல்லா தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிடும்.

உத்தரப் பிரதேசத்தில் பல்ராம்பூர் என்றவிடத்தில் இரு போட்டி கோஷ்டிகளிடையே ஏற்பட்ட கைகலப்பில் இருவர் கொல்லப்பட்டனர். ஆயினும் வாக்குப்பதிவு பாதிக்கப்படவில்லை.

### 6 வாரம் கடுங்காவல்

தெரனியாகலை, வியாழன்

எட்டியாந்தோட்டை டனடின் தோட்டத்தைச் சேர்ந்த எம். மாரிமுத்து என்ற தொழிலாளிக்கு அவிசாவளை மாஜிஸ்டிரேட் திரு. ஜே. ஜி. எல். சுவாரிஸ் ஆறு வாரம் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்

மாரிமுத்துவை வேலையினின்று நீக்கிய பின்னர், அவர் தோட்டத்தில் சட்டவிரோதமாக குழப்பம் விளைவித்ததாக அவர் மீது குற்றம் சாட்டி இவ்வழக்கு பதிவாதியிருந்தது.

எதிரி தாம் குற்றவாளி என ஒப்புக்கொண்டார்.

### அம்மை பரவக் காரணம்

#### வைத்திய அதிபர்விளக்கம்

கொழும்பு, வியாழன்

'இலங்கையில் பெரியம்மை தோன்றியதற்குக் காரணம், ஏராளமானவர்கள் பெரியம்மை தடுப்பு மருந்து கட்டாததே' என்று கொழும்பு மாநகரசபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி. நடராஜா குறிப்பிட்டுள்ளார்.

# வானவெளி ஆராய்ச்சியில் ஒத்துழைப்போம்

## குருஷ்சேவுக்கு ஜனதிபதி கென்னடி அறிவிப்பு

வாஷிங்டன், பெப். 22

வானவெளி ஆராய்ச்சியில் ரஷ்யாவுடன் ஒத்துழைக்கவிரும்புவதாய் ஜனதிபதி கென்னடி தெரிவித்திருக்கின்ருர்.

ரஷ்யாவுடன்நேரடியாகவோ அல்லது ஐ. நா. மூலம் ரஷ்யாவுடனே இவ்விஷயத்தில் ஒத்துழைப்பதற்கு அமெரிக்கா பெரு மகிழ்ச்சியடையும் என திரு. கென்னடி, சோவியத்பிரமதர் குருஷ்சேவுக்கு அறிவித்திருக்கிறர். தேசங்களுக்கிடையேயுள்ள அபிப்பிராய பேதங்கள் மனித்சமூக நலனில் குறுக்கிட இடமளிக்கக் கூடாதுஎன்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில் அமெரிக்க வான்வெளி வீரர் கிளனின் உடல்நிலை மிகவும் நேர்த்தியாய் இருப்பதாக வைத்திய அறிக்கையொன்று கூறியுள்ளது.

### கயான பிரதமர் குற்றச்சாட்டு

ஜோர்ஜ்டவுன், பெப். 22

பிரிட்டிஷ் கயானவின் மக்கள் முன்னேற்றக் கட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்யப்பட்டதாக கயான பிரதமர் திரு. செட்டிஜகன் இன்று அறிவித்தார். இதற்கு ஒரு அரசியல் கட்சிமீது குற்றம் சாட்டி பிரதமர் அக்கட்சிக்கு வெளிநாட்டு அரசாங்கம் ஒன்று உதவிபுரிவதாகவும் கூறினர்.

### கிருஷ்ணன் வெற்றி

பங்களூர், பெப். 22

பங்களூரில் ராமநாதன் கிருஷ்ணனுக்கும், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ராய் எமர்ஸனுக்குமிடையே நேற்று நடைபெற்ற சிநேகபூர்வமான டென்னிஸ் போட்டியில் 6-4, 7-4, 6-3 புள்ளிகளால் கிருஷ்ணன் வெற்றிபெற்ருர்.

### 'புளூ'வுக்கு 109 பேர் பலி

டோக்கியோ, பெப். 22

ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் சளிச்சுரத்துக்கு ('இன்புளுவன்சா') 109 பேர் பலியானர்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

### பால வேலை ஆரம்பம்

கட்டாக், பெப். 22

ரூ. 3 கோடி செலவில் ஓரிஸாவிலுள்ள மகாநதியின் மீது பாலம் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாயின.

### மணி வாக்கு

'உயர்ந்த சிலருடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்வதிலும் தாழ்ந்த பலருடன் ஒப்பிட்டுப்பார்த்துக் கொள்வதே நன்று.'


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
மாசி மீ 12 உ ( 23- 2 - 62)


## அயூப்கான் ஆட்சி

பாகிஸ்தானில் மக்களாட்சியை மலரச் செய்வதற்காகவே ராணுவப் புரட்சியைத் தாம் ஏற்படுத்தியதாக அதிபர் அயூப்கான் ஆரம்பத்தில் கூறி வந்தார். ஆட்சிப் பொறுப்பை அவர் கைப்பற்றி ஆண்டுகள் பல கழிந்துவிட்டபோதிலும் பாகிஸ்தானில் உண்மையில் மக்களாட்சி மலருவதற்கான எந்த நடவடிக்கையையும் அவர் மேற்கொண்டதாய்த் தெரியவில்லை. அவருடைய சர்வாதிகார முறைதான் அங்கு தாண்டவமாடுகின்றது.

அயூப்கானின் சர்வாதிகார ஆட்சியை ஆட்சேபித்து லண்டனிலுள்ள பாகிஸ்தானியர் ஆர்ப்பாட்டம் நடாத்தியிருக்கின்றனர். அங்குள்ள பாகிஸ்தானியர் தங்கள் அதிருப்தியைப் பகிரங்கமாகக் காட்டியது இதுவே முதல் முறையாகும். பிரிட்டிஷ் தொழிற் கட்சியைச் சேர்ந்த முக்கிய அங்கத்தினர் சிலரின் ஆதர[illegible] இச் கிளர்ச்சியை நடத்[illegible]வர்களுக்குக் கிடைத்து[illegible]து. அயூப்கானின்மீது [illegible]க்காத சில அவருக்கு [illegible]ராக இந்த ஆர்ப்பாட்ட[illegible]த நடத்தினர் [illegible] என[illegible] சொல்லிவிட முடியாது. இ[illegible]ல் தமக்கு எதிர் காலத்தில் ஏற்படவிருக்கும் ஆபத்தை அவர்கள் உணர்ந்திருந்தபோதிலும் பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி முறை மீண்டும் உதிக்க வேண்டுமென்பதற்காகவே லண்டனில் உள்ள பாகிஸ்தானியர் இக்கிளர்ச்சியை நடாத்தியிருக்கின்றனர்.

இந்தியாவில் இன்று மூன்றாவது பொதுத் தேர்தல் நடைபெற்றுவருவதுடன் அங்கு மக்களின் வாழ்க்கைத் தரமும் விரும்பத்தக்களவு சீரடைந்து வருகின்றது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந்தியா விரிவான அடிப்படையில் இப்போது செயற்படுத்தியும் வருகின்றது. சென்ற பதினைந்து ஆண்டுகளில் இந்தியா பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றமடைந்து வருவதுடன் உலகின் பாராட்டுக்களையும் அது தாராளமாகப் பெற்று வருகின்றது. இவற்றை எல்லாம் பார்த்துச் சகிக்க முடியாத பாகிஸ்தான் இந்தியா மீது பழி சுமத்துவதிலும் இந்தியாவுக்கு எதிரான பிரசாரங்களைச் செய்வதிலுமே திருப்தி அடைந்து வருகின்றது. எனவே, அயூப்கான் துவேஷத் தீயை வளர்த்துவருகின்றாரேயன்றி பாகிஸ்தான் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இதுவரை உருப்படியான காரியம் எதுவும் செய்ததாயில்லை.

நீதி பரிபாலனம் அனுபவித்து வரும் உரிமைகளையும் பறிமுதல் செய்ய அயூப்கான் தயங்கவில்லை. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் சுராவர்த்தியை விடுதலை செய்ய வேண்டுமென கிழக்குப் பாகிஸ்தானில் மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர். அத்தகைய ஒரு நிலைமை ஏற்படாமற் செய்வதற்காக பாகிஸ்தானில் அவசரகாலச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இத[illegible] நீதிமன்றத்தின் மூல-

தடுப்புக் காவலில் உள்ளவர்கள் நிவாரணம் தேடும் உரிமையும் இப்போது பாகிஸ்தானில் ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. அயூப்கான் ஆட்சியில் ஜனநாயக உரிமைகள் பறிமுதல் செய்யப்படுவதையும் அடக்குமுறைகள் அதிகரிப்பதையுமே பாகிஸ்தான் மக்கள் இன்று கண்ணாரக் கண்டுவருகின்றனர். இந்த அழகில், அரசியல் ஊழல்களை நீக்கி மக்கள் ஆட்சியை பாகிஸ்தானில் மலரச் செய்வதற்காகவே ராணுவப் புரட்சியைத் தாம் நடாத்தியதாக அயூப்கான் ஜம்பமடிப்பதை [illegible] நம்புவார்கள்! [illegible]

# இந்தியாவில் கைக்கடிகார உற்பத்தி

## ஓராண்டில் விற்பனைக்கு வரும்

### பொறிஇயல் வல்லுனர்களுக்கு பயிற்சி

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கைக்கடிகாரங்கள் இன்னும் ஓராண்டுக்குள் விற்பனைக்கு வந்துவிடும். ஆண், பெண் இரு தரத்தாருக்கும் ஏற்ற மாதிரிகளில் இருக்கும் இக் கடிகாரங்கள் முதலில் ஆண்டு ஒன்றுக்கு 55,500 வீதம் உற்பத்தியாகும். ஆறு ஆண்டுக் காலத்துக்குள் இந்த உற்பத்தி வீதம் படிப்படியாக உயர்ந்து 3,60,000ஐ எட்டி இந்நாட்டின் கைக்கடிகாரத் தேவையில் பெரும் பகுதியை நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இறக்குமதி செய்யப்பட்ட உறுப்புக்களைக்கொண்டு கடிகாரங்களை இணைக்கும் வேலை ஏற்கனவே இங்கு தொடங்கிவிட்டது.

அரசாங்கத்துக்குச்சொந்தமான பங்களூர்ஹிந்துஸ்தான்யந்திரக் கருவித் தொழிற்சாலைக்கும் ஜப்பான் "சிட்டிசன் வாட்ச் கம்பனி"க்கும் இடையே தொழில் நுட்பக் கூட்டுறவு ஒப்பந்தம்கையெழுத்தானதைஅடுத்து இந்தியாவி[illegible] முதல் கைக் கடிகாரத் தயாரிப்புத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது

#### ஆண்களுக்கும் பெண்களுக்கும்

1960 ஜுலை ஆகஸ்டில் ஹிந்துஸ்தான் யந்திரக் கருவித் தொழிற்சாலைத் தலைவர் திரு. எம். கே. மத்துல்லாவின் தலைமையில் இந்தியப் பிரதிநிதிக் குழு ஒன்று ஜப்பானுக்கு விஜயஞ் செய்து "சிட்டிசன் வாட்ச் கம்பெனி" யுடன் கலந்தாலோசித்து இத்திட்டத்தைத் தயாரித்து முடித்தது.

இத்திட்டத்துக்கு மொத்தம் [illegible] கோடி செலவாகும். ஆங்கே முதலில் இரண்டு ரகக் கடிகாரங்கள்—ஆண்கள் அணியும் கடிகாரங்கள் பெண்கள் அணியும் கடிகாரங்கள்—தயாரிக்கப்படும். இவை கடிகடிகாரத் தயாரிப்பில் ஏற்பட்டுள்ள புது முன்னேற்றங்களையும் மாதிரிகளையும் கொண்டவையாக இருக்கும்.

#### ஜப்பானிய வல்லுநர் உதவி

தொழிற்சாலைக் கட்டட நிருமாண அமைப்பு விவரங்களைப் தயாரிப்பதில் உதவி புரிவதற்காக ஐந்து ஜப்பானிய வல்லுநர்கள் இந்தியாவுக்கு வந்திருந்தனர். கைக்கடிகார உறுப்புகளை இணைப்பதில் இந்தியப் பொறியியல் வல்லுநர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மேலும் மூன்று ஜப்பானிய வல்லுநர்கள் இங்கு வந்துள்ளனர்.

இந்த ஒப்பந்தப்படி இந்தியத் தொழில் நுட்பச் சிப்பந்திகள் நூறு பேருக்கு ஜப்பானில் சுமார் ஒன்றரை வருடகாலம் பயிற்சி அளிக்கப்படும். இவர்களில் 52 பேர் இப்போது ஜப்பானில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இத்தொழிற்சாலையில் கடிகார உற்பத்தி 1962 கடைசிக்குள் தொடங்கி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

#### உற்பத்தித் திட்டம்

இங்கே தயாராகும் கடிகாரங்கள் முதலில் 54 சதம் உள்நாட்டு உறுப்புகள் கொண்டவையாயிருக்கும். இரண்டாவது ஆண்டில் 60 சதமாகவும் மூன்றாவது ஆண்டில் 72 சதமாகவும் நான்காவது ஆண்டில் 84 சதமாகவும் படிப்படியாக உள்நாட்டு உறுப்புகளின் அளவை அதிகப்படுத்திக்கொண்டே போவதற்கேற்ற படி தயாரிப்புத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகுங்கூட சுமார் 15 சதம் உறுப்புகளை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

#### இன்றைய தேவை

இப்போது இந்தியாவுக்கு ஆண்டொன்றுக்கு 20 லட்சம் கைக்கடிகாரங்கள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆண்டொன்றுக்கு அதிக அளவு 3,60,000 கடிகாரங்களே உற்பத்தி செய்வதற்கேற்றபடி இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ள போதிலும் இந்தியாவின் தேவைக்கேற்ப இதை மேலும் விரிவு படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# யாழ்ப்பாணத்துக்கு யாத்ரிகர் நிலையம்

## முதலியார் முத்துத்தம்பி யோசனை

யாழ்ப்பாணம், வெள்ளி

"யாழ்ப்பாண நகரம் அபிவிருத்தியடைய பலவேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளது. இவற்றில்முக்கியமானதுவெளிநாட்டு யாத்திரிகர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்க வசதியோடு கூடிய இடம் இல்லை. யாழ்ப்பாணத்துக்கு இலங்கைக்குவரும் வெளிநாட்டவர்கள் அதிகம் வருவதில்லை. யாத்திரிகர்கள் நிலையமொன்று யாழ்ப்பாணத்துக்கு மிகவும் அவசியம். இதன்மூலம் பெரும் வருவாயையும் பல பெரியார்கள், மேதைகள் ஆகியோரின் நெருங்கிய தொடர்பும் நமக்குக் கிடைத்துநாம் பலவழிகளிலும் முன்னேற்றமடைய வழியேற்படும். இக்குறையை மாநகரசபைஇப்புத்தாண்டிலாவது செய்ய முயற்சியெடுக்கவேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் புதியமேயர் திரு. எம். ஜேக்கப்புக்கும் மத்திய கல்லூரி புதிய அதிபர் திரு. ஏ. இ.தம்பருக்கும் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்தினல் அளிக்கப்பட்ட பாராட்டுபசாரக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த முதலியார் சி. முத்துத்தம்பி குறிப்பிட்டார். இப்பாராட்டு வைபவம் இச் சமாசத்தில் நேற்று மாலைநடைபெற்றது. இதிற் பலகூட்டுறவாளர்கள் கலந்துகொண்டனர்.

முதலியார் முத்துத்தம்பி மேலும் பேசியதாவது:-

புதிய மேயர் திரு. ஜேக்கப் போன்ற இளைப்பாறிய ஆசிரியர்கள் சமூகசேவைக்கு லாயக்கானவர்கள். யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக்கு இரவும், பகலும் உழைக்கக்கூடியவர்களே தேவையாக இருக்கிறது. உத்தியோகங்களிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் சேவையை நாடு இழக்கக் கூடாது. இதே நேரத்தில் இவர்கள் நாட்டுக்குச்சேவைசெய்ய முன்வரவேண்டும். இந்தவகையில் புதியமேயர் நகரின் அபிவிருத்தியைக் கவனிக்கக் கூடிய வாய்ப்புள்ளவர். இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி யாழ்ப்பாணத்தை முன்னேறச் செய்வது அவசியம்.

இலங்கையில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியும் அதன் [illegible]பர்களும் முக்கியமானவர்களும் பிரபல்யமானவர்களுமென்பது பலரும் அறிந்தது. அந்த வகையில் இலங்கை ஆசிரிய உலகில் திரு. தம்பரும் முக்கிய இடத்தை வகிப்பவர். யானை அடிவைப்பதுபோல் மிக நிதானமாகக் கருமம் ஆற்றும் அவரின் தலைமையில் யாழ்ப்பாண மாணவரின் கல்வி நிலை முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கலாம்.

வடபகுதி கூட்டுறவு உதவிக் கமிஷனர் திரு. எஸ். ஆசீர்வாதம் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் சிறந்த கட்டிடங்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களில் கூட இல்லையென்றும், இதற்கு வசதி செய்துகொடுக்கும் வகையில் கோவில்களுக்குச் சொந்தமாக சும்மா கிடக்கும் நிலம் பலவற்றை இத்தேவைகளுக்கு உதவ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கூறினர்.

கொக்குவில் கிராம சபைத் தலைவர் திரு. சி. அருளம்பலம் பேசுகையில் கடந்த சில காலமாக யாழ்ப்பாண மாநகரசபையைப்பற்றி வெளியிடங்களில் உயர்ந்த நல்ல அபிப்பிராயம் இல்லையென்றும் மீண்டும் யாழ்ப்பாணத்தின் புகழை நிலைநாட்ட நல்ல சேவையாற்ற வேண்டியது அவசியமென்றும் தெரிவித்தார்.

வழக்கறிஞர் திரு. எஸ். வி. மகாதேவா பேசுகையில் உயர்ந்த அந்தஸ்தை அடைந்தவர்கள் எவரதும் கைப்பொம்மைகளாக மாறிவிடாமல் நேர்மையுடனும் கடமையைத் திறம்படச் செய்து மக்கள் சேவையாற்ற வேண்டுமெனக் கூறினர்.

தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு மேயர் திரு. ஜேக்கப் நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:-

பொதுசன சேவையென்றால் கூட்டுறவு என்றுதான் பொருள். எதையும் ஒற்றுமையுடன் செய்தாலேயே இலகுவாகக் கருமமாற்றமுடியும். அப்பொழுதுதான் உண்மையான தொண்டாற்ற முடியும்.

நேர்மையும் கண்ணியமும் தான் என்னை இந்நிலைக்கு உயர்த்தின. ஏழைகளுக்கு நன்மைசெய்யவே நாம் இருக்க வேண்டும். ஏழைகள் கண்ணி

(8-ம் பக்கம் பார்க்க)

### ஜயாறன் எழுதுவது

இரண்டு நாட்களாகப் பல்வலி. பேனவைப் பிடித்தால் மனம் வேலைசெய்ய மறுக்கிறது. ஒரு நண்பர் பல்லைப் பிடுங்கிவிடவேண்டியதே என்றார். "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனில் இவன்" என்கிறார் வள்ளுவப் பெருந்தகையும். ஆனால் அது உடனடியாகநடக்கக்கூடியதல்ல.

முன்னொருதரம் இதேமாதிரி உபத்திரவம் ஏற்பட்டது. பல் நிபுணரிடம் சென்றபோது நான்கு பற்களைப் பிடுங்கிவிடவேண்டுமென்றும் ஆஸ்பத்திரியில் 3 வாரம் இருக்கவேண்டுமென்றும் சொன்னார். இப்போது மதுரை ஆதீனகர்த்தராக இருக்கும் பெரியார் அப்போது கொழும்பிலே பெரிய வர்த்தகராக இருந்தார். அவரிடம் இதுபற்றிக்கூறினேன். பல்லைப்பிடுங்கவேண்டாமென்றும், அது நம்முறைக்கு உகந்ததல்லவென்றும் கூறி,ஒரு கைமருந்து சொன்னார். இந்துஉப்பை வறுத்துப் பொடியாக்கி வெந்நீரில் கரைத்து, பன்முறையும் கொப்பளிக்கச் சொன்னார். அப்படிச் செய்ததும், வலியும் ஆச்சரியமாகமறைந்தது. பற்களும் தப்பின.

ஆனால் மீண்டும் அது இப்போது வலிக்க ஆரம்பிக்கவே பழைய உப்பைக் கொப்பளித்தும் பயன் இல்லை. ஒருவேலையும்ஓடவில்லை. இவ்விதசமயங்களில் மனஆறுதலுக்காக சுவாமி ராமதாஸ் எழுதிய புத்தகத்தைப் படிப்பது வழக்கம்.ஏதாவது நல்ல யோசனை கிடைக்கும். அப்புத்தகத்தைப் புரட்டியபோது ஒரு கேள்விக்கு அவர் அளித்தபதில் கிடைத்தது.

கே:- பல வருடங்களாக நான் நோயால் அவதிப்படுகிறேன். விடாமல் பிரார்த்தனை செய்தும், துன்பம் நீங்கவில்லை. இதன் கருத்தென்ன?

ராமதாஸ்:- இவ்வாக்கியத்தை இருவிதங்களாகக் கவனிக்கலாம். நாம் முன்னர் செய்த வினையின் பயனகவே துன்பப்படுகிறோமென்று கொண்டால், இதை மகிழ்ச்சியுடன் சகித்து நமது ஆன்மீக முன்னேற்றத்துக்கு இதைஅவசியமானஒருபடியாகக்கொள்ள வேண்டும். முன்செய்த ஏதோ தவறினால்தான் இப்போது துன்பப்படுகிறோம். ஆகவே இப்போது தெய்வத்தைமறவாமல், பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும். எதிர்காலத்தில் நாம் துன்பப்படாமல் தப்ப வேண்டுமானால் நல்லதே நினைத்து, நல்லதே செய்யவேண்டுமென்பதற்கு இந்த நோய் எமக்கு ஒரு பாடமுமாகும்.

மற்றொருவிதமாகவும் இதைக் கொள்ளலாம். தெய்வ சிந்தனையில் அதிகம் கலக்கக் கலக்க, இத் துன்பங்களை மகிழ்ச்சியுடன் சகிக்கமுடியும். ஏனெனில், இத் துன்பமே நம்மை தெய்வத்திடம் கொண்டு சேர்க்க ஒரு வழியாகவுமுள்ளது. துன்பம் வரும்போதுதான் நாம் மற்றக் காலத்தைவிட அதிகமாக கடவுளை நினைக்கிறோம். ஆகவே துன்பம் வருவதும் நமது நன்மைக்கே என்று கொள்ளவேண்டும். நம்மை நமது அண்மையில் சேர்த்துக் கொள்ள தெய்வமே இத் துன்பங்களைத் தருகிறார் என்று நாம் நம்பவேண்டும்.

என்ன வரம் வேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ணர் கேட்டபோது, குந்திதேவி, தமக்கு அதிக துன்பமும், சங்கடங்களும் வேண்டுமென்று கேட்டாராம்! துன்பம் இல்லாவிடில், கடவுளைத் தாம் நினைக்கவே முடியாமல் போய்விடுமென்றும் அவர் அஞ்சினாராம்.

குந்திதேவி தமக்குத் துன்பம் வேண்டுமென்று கேட்டுப் பெறவேண்டியதாயிற்று. ஆனால் எங்களுக்கோ, கேட்காமலேயே

(7-ம் பக்கம் பார்க்க)

# 'கெடுபிடிப் போரில் இந்தியாவை இழுக்கிறார்கள்'

## திரு' கிருஷ்ணமேனனை எதிர்ப்பவர்கள் பற்றி நேரு

புதுடில்லி, பெப். 22
ஸ்ரீ கிருஷ்ணமேனனை எதிர்ப்பவர்கள் இந்தியாவை கெடுபிடி யுத்தத்தில் இழுப்பதாகவும், 'மக்கார்திஸ'த்தைப் புகுத்துவதாகவும் பிரதம மந்திரி நேரு இங்கு கூறினார். மக்காத்திஸம் அமெரிக்காவுக்கு பெரிதும் தீமை விளைவித்திருப்பதாகவும், அது இந்தியாவுக்கு அழிவை உண்பண்ணக்கூடும் என்றும் அவர் கூறினார்.

இங்கு பெரிய பொதுக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே ஸ்ரீ நேரு மேற்கண்டவாறு கூறினார். "பிற்போக்கு வாதிகள், பண முட்டைகள், பெரிய பத்திரிகைகள், ஹிந்து-முஸ்லிம் வகுப்புவாதிகள் ஆகியவர்களால்ஆதரிக்கப்படும் ஆச்சாரிய கிருபளானி, அரசாங்கம் மீதும் நமது வெளிநாட்டு கொள்கை, சோஷலிஸ லட்சியம் மீதும் உள்ள கோபத்துக்கு ஸ்ரீ மேனனை இலக்காக்கியுள்ளார்" என்றார் ஸ்ரீ நேரு.

பிரதம மந்திரி கூறியதாவது:-

ஆச்சாரியகிருபளானியும் அவருடைய ஆதரவாளர்களும் என்னைக் குறை கூறவோ அல்லது எனக்கு எதிராகப் பேசவோ தயங்குகின்றனர். என்னிடம் இந்திய மக்கள் அன்பு வைத்திருப்பதாலேயே அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. எனவே, என் மீது சொல்ல வேண்டியவற்றையெல்லாம் ஸ்ரீ கிருஷ்ண மேனன் மீது சொல்லுகின்றனர்.

நேரு தமது குரலை உயர்த்தி "என்மீதுசொல்லஅவர்கள்விரும்புவதையெல்லாம் பகிரங்கமாகச்சொல்லட்டும்என்னைப்பாதுகாத்துக்கொள்ள எனக்குப் பலம் இருகிக்றது" என்று கூறினார்.

இவ்வாறு நேரு கூறியதும் 'பண்டித நேரு வாழ்க' என்று கூட்டத்தினர் கோஷமிட்டனர்.

ஆச்சாரிய கிருபளானியும் அவருடைய ஆதரவாளர்களும் கூறும் விஷயங்கள் குறித்து தாம் வியப்படைவதாக நேரு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஸ்ரீ கிருஷ்ண மேனன் ஒரு கம்யூனிஸ்ட் என்று அவர்கள் சொல்ல ஆரம்பித்திருக்கின்றனர். அது சுத்த பொய்யாகும். மேனன் கம்யூனிஸ்டல்ல.ஆனால் சோஷலிஸ்ட் என்று திருப்பித் திருப்பிச் சொல்லப்பட்டிருக்கிறது. என்னைப்போலவே ஸ்ரீ மேனன் ஒரு சோஷலிஸ்ட். ஸ்ரீ மேனன் உண்மையான சோஷலிஸ்ட்.

ஸ்ரீ மேனன் கம்யூனிஸ்ட் என்று கூறும் ஆச்சாரிய கிருபளானியும் அவருடைய ஆதரவாளர்களும் அமெரிக்க செனட்டர் மக்கார்தியின் முறைகளைக் காப்பியடிக்கின்றனர்.

மக்கார்திஸம் முற்றிலும் தவறான காரியமாகும். அது அமெரிக்காவுக்கு மிகவும் தீமை விளைவித்தது. அது இந்தியாவுக்கு வந்தால் நமக்குத் தீமைதான் ஏற்படும்."

சென்ற ஐந்தாண்டுகளில் இந்திய ராணுவத்தில் புதிய விழிப்பை உண்டுபண்ணியதற்காகவும் அதை நவீன ராணுவமாக்கியதற்காகவும் கிருஷ்ணமேனனை நேரு பாராட்டினார்.

இந்தியாவில் பாதுகாப்பு தொழிலை ஸ்ரீ மேனன் புரட்சிகரமானதாக்கியிருக்கிறார். அதன் விளைவாக ஒலியை விட வேகமாகச் செல்லும் ஜெட் விமானங்களும் மற்ற பாதுகாப்பு சாதனங்களும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றார் நேரு.

சற்று கிண்டலாக நேரு பின்வருமாறு கூறினார்: இந்தியாவின் பாதுகாப்பு முறை மோசமாகிவிட்டதாக ஆச்சாரிய கிருபளானி கூறுகிறார்.அவர் கூறும் பொறுப்பற்ற விஷயங்கள் பற்றி எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆச்சாரிய கிருபளானி எப்போதாவது துப்பாக்கி சுட்டிருக்கிறாரா அல்லது பொம்மை துப்பாக்கியையாவது சுட்டிருக்கிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

---

நாவற்குழி கிராமசபை

## தலைவர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

### 10 அங்கத்தவர்கள் ஆதரவு

கைதடி, வியாழன்
நாவற்குழி கிராமசபைத்தலைவர் திரு. இ. வேலாயுதர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரப்போவதாகவும் இதற்கான விசேஷகூட்டத்தைக் கூட்டுமாறும் இச்சபையின் 10 அங்கத்தவர்கள் ஸ்தலஸ்தாபன உதவி அதிபரைக் கேட்டுள்ளனர். மொத்தமுள்ள 14 அங்கத்தவருள் 10 பேர் இதில் கைச்சாத்திட்டுள்ளனர். இதன்பிரதி ஸ்தலஸ்தாபன அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

---

## உதை பந்தாட்டம்

மாவிட்டபுரம், வியாழன்
தையிட்டி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 3-ம் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அமைப்பின்கீழ் மாவிட்டபுரம் விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி விளையாட்டுக்கழகமும் கலந்துகொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் மயிலிட்டி ஒரு கோலால் வெற்றியீட்டியது.

---

# "சகல பர்டசாலைகளும் ஒரே நிர்வாகத்தில் வரவேண்டும் விணபணச்செலவைத் தவிர்க்க இதுவேவழி"

டாக்டர் குருகே

கொழும்பு, வியாழன்
"ஒரு நிர்வாகத்தின்கீழ் எல்லாப் பாடசாலைகளையும் கொண்டுவருவதின் முக்கிய நோக்கம், வீணகப் பணம் செலவளிப்பதையும், வீண் முயற்சிகளையும் தவிர்த்து அவற்றை நல்ல முறையில் அமைப்பதே" என்று கல்வியமைச்சின் உயர்தர உதவி அதிகாரி டாக்டர் ஆனந்த குருகே சர்க்கியூட் இன்ஸ்பெக்டர்களுக்கு அனுப்பியுள்ள குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

"ஒரேதரத்தில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளும் உதவி பெறும் பாடசாலைகளும் ஒன்றுக்கொன்று அண்மையில் இருப்பதால், சில வகுப்புகளில் போதிய மாணவர்கள் இல்லை. ஆசிரியர் ஒருவர் படிப்பிப்பதற்குக்கூட, ஒரு வகுப்பில் போதிய மாணவர்கள் இல்லை. இதன்காரணமாக ஆசிரியர் ஒருவர் பல வகுப்புக்களையும் கவனிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஒரு கனிஷ்ட பாடசாலை. ஆரம்பவகுப்பிலிருந்து எட்டாம்வகுப்புவரையும், உயர்தர பாடசாலை ஜி. ஸி. யி. விருந்து எட்டாம்வகுப்புவரையும் கொண்டிருக்கும்.

---

உலக அரங்கில்

## சிறந்துவிளங்கும் நூல்

### பாடசாலை திருவள்ளுவர் தினத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்
"மக்களுக்கு வேண்டிய வாழ்க்கை நெறிகள் அனைத்தையும் காட்டுவதோடு உலக அரங்கிலும் சிறந்துவிளங்கும் இலக்கிய நூல் திருக்குறளாகும் தமிழ் நூல்களாகிய சங்க இலக்கியங்களின் கருத்துக்களைத் திரட்டி வகுக்கப்பட்டுள்ளதால் நமது மொழிக்கும் அது தனிச்சிறப்பைக்கொடுத்து நிற்கிறது."

இவ்வாறு வண்ணை நாவலர் பாடசாலையில் மாணவர் சங்கத்தின் சார்பில் நிகழ்ந்த திருவள்ளுவர்தின வைபவத்தில் பேசிய ஆசிரியர் திரு. சி. சீவரத்தினம் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:-

திருவள்ளுவர் திருநாளை எப்போது கொண்டாடவேண்டுமென்ற பேதத்தில் காலத்தைப் போக்குவதிலும்பார்க்க திருக்குறளைப் படித்து அதிற் கூறப்பட்டிருக்கும் இலட்சியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவதே சிறந்ததாகும்.

இவ்வைபவத்திற்கு ஆசிரியர் திரு. சி. முத்துத்தம்பி தலைமைவகித்துப் பேசும்போது, கடைச்சங்க இலக்கிய நூலாகிய திருக்குறளில் மக்கள் பண்பாட்டையும் ஒழுக்க முறைகளையும் விளக்கிக் கூறியிருப்பதை எடுத்துக்காட்டினார்.

ஒழுக்கநெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய அவசியம்பற்றி ஆசிரியர் திரு. வ. கந்தசாமி பேசினார்.

செல்வன் சி. கந்தவேல், செல்வி தி. தியாகேஸ்வரி ஆகிய மாணவர் பேச்சுக்களும் நிகழ்ந்தன. செல்வி க. மகேஸ்வரி திருக்குறள் கீதங்கள் பாடினார்.

---

## தென் இந்திய கலைவளர்ச்சி

### அமெரிக்க ஆராய்ச்சியாளர்கருத்து

நியூயோர்க், பெப் 22
"சோழர்காலத்தில் செதுக்கப்பட்ட வெண்கல சிலைகள் தென் இந்திய கலை வளர்ச்சியின் உயர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இக்காலத்து வெண்கல சிலையில் பெரும்பாலானவை இன்றுவரை பல கோயில்களில் இருக்கின்றன."

ஆஷ்மோலின் நூதனசாலையின் உதவிப் பொறுப்பாளர் டாக்டர் ஹாலி, "ஆசிய இல்லத்தில்" நடைபெற்ற கூட்டமொன்றில் "தென் இந்தியகலையும், சிற்பக்கலையும்" என்னும் பொருள்பற்றிப் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

"சர்வசங்காரத்தின்போது தாண்டவமாடும் நடராஜப்பெருமானின் திருநடனம் கலை வரலாற்றில் ஒரு அதிமுக்கிய அம்சமாகத் திகழ்கிறது. இந்தியாவின் ஏனைய பிரதேசங்களின் கலைகளைப்போல தென் இந்தியக் கலையும் சமயத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் தென் இந்திய கோயில்களில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்கள் பழுதடையாமல் இருக்கின்றன. சென்னைக்கு அணித்தாக அமைந்துள்ள மாமல்லபுரம் இன்றுவரை இருப்பதுஓர் அதிசயம். இறைவன் அருள்தான் இதற்குக் காரணமாக இருத்தல் வேண்டும்."

---

## இலங்கை—ரஷ்ய வர்த்தக ஒப்பந்தம்

கொழும்பு, வியாழன்
இலங்கையும் சோவியத்யூனியனும் 3 வருட வர்த்தக ஒப்பந்தம் ஒன்றில் இன்று கைச்சாத்திட்டன. ஒப்பந்தப்படி தேயிலை, தேங்காய்எண்ணெய், தேங்காய்த்துருவல், ரப்பர், கொப்பரா ஆகியவற்றை இலங்கை ஏற்றுமதி செய்யும். யந்திரவகைகள், எஃகு, இரும்புப் பொருள்கள், சீமெந்து ஆகியவற்றை உலகமார்க்கெட் விலையில் இலங்கை இறக்குமதிசெய்யும். வர்த்தக அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளையும், இலங்கையிலுள்ள ரஷ்யத் தூதரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

---

# கட்டட விண்ணப்பங்கள் துரிதபரிசீலனை

## விண்ணப்பித்த பத்துநாட்களில் அறிக்கை சமர்ப்பிக்க மேயர் உத்தரவு

யாழ்ப்பாணம் வியாழன்
கட்டட விண்ணப்பங்களைத் துரிதப்படுத்த புதிய மேயர் நடவடிக்கை எடுத்துவருகிறார். கட்டடங்கள் கட்ட அனுமதி கோரி விண்ணப்பித்தவர்களுடைய விண்ணப்பங்கள் வருடக்கணக்காகத் தேங்கிக் கிடப்பதாக வரியிறுப்பாளர் பலர் மேயருக்குப் புகார்செய்துள்ளனர்.

இதன்காரணமாக, கட்டட விண்ணப்பங்களை இதற்குப் பொறுப்பாகவுள்ள சுகாதார வைத்திய அதிகாரி, விண்ணப்பம் கிடைத்து 10 நாட்களுக்குள் விண்ணப்பம் சம்பந்தமான அறிக்கையைப் பூர்த்தி செய்து தரவேண்டுமென மேயர் கேட்டுள்ளாரெனத் தெரிகிறது.

---

## மாநகரசபை நிர்வாகத்தில் பல மாற்றங்கள்

### புதியமேயர் ஆலோசனை

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாண மேயர் திரு. எம். ஜேக்கப் மாநகரசபையின் நிர்வாகத்தில் சில மாற்றங்களைச் செய்யவிருக்கிறாரெனத் தெரிகிறது.

இந்த மாற்றங்கள் சிலருக்கு சிரமத்தை ஏற்படுத்தினாலும் ஊழல்கள் சிலவற்றைத் தடுக்கவும் மாநகரசபையின் நிர்வாகத்தைத் திருத்தியமைத்து வரியிறுப்பாளருக்கு உதவிய ஊக்கவுமே இத்தகைய மாற்றங்களை அவர் செய்யவிருக்கிறாரெனத் தெரிகிறது.

---

# கட்டாக்காலிகள்குறித்து மேயர் வேண்டுகோள்

## ஊழியர்களை வேலையிலிருந்து நிற்பாட்டுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், வியாழன்
கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்கென மாநகரசபையினால் நியமிக்கப்பட்டவர்கள் கைலஞ்சம் வாங்குவதாகவும், முறைகேடாக நடந்துகொள்வதாகவும் யாழ்ப்பாணம் மேயருக்கு புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

இப்புகார்காரணமாக இதில் அமர்த்தப்பட்டிருந்தவர்களை உடனடியாக வேலையிலிருந்து நிற்பாட்டுமாறு மேயர் திரு எம். ஜேக்கப் உத்தரவிட்டுள்ளாரெனத் தெரிகிறது.

இதே வேளையில் அவர் பொதுமக்களுக்கு ஓர் வேண்டுகோளையும் விடுத்துள்ளார். கால்நடைகளை வீதிகள்வழியே கட்டாக்காலிகளாக விடாது பார்த்துக்கொள்ளுமாறு அதன் சொந்தக்காரரை அவர் அதில் கேட்டிருக்கிறார்.

---

## பணடாரநாயக்கா கமிஷனுக்கு எகிப்திய நீதிபதி

கொழும்பு, புதன்
காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் கொலை பற்றிய அரசியல் அம்சங்களை ஆராயும்பொருட்டு நியமிக்கப்படவிருக்கும் விசாரணைகமிஷனில் சேவைபுரிவதற்காக ஐக்கிய அராபியக் குடியரசைச் சேர்ந்த சிரேஷ்ட நீதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். திரு அட்லியூனிஸ் என்னும் அவரை, பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவின் வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதி நாஸர் நேரடியாகத் தெரிவு செய்ததாய் அறிவிக்கப்படுகிறது. இந்திய அரசாங்கமும் விரைவில் ஒருவரைத் தெரிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கடவுள் தம் மனக்கருணையால் துன்பம்தந்திருக்கிறார். ஆகவே தெய்வத்தை அதிகம் நினைத்து, [illegible]த்தை அவரிடம் ஒப்படைத்[illegible]விடவேண்டும். மருந்து சாப்பி[illegible]ரம்தான், ஆனால் சில நோய்கள்[illegible]ருந்தாலும் நீங்குவதில்லை. [illegible]முணுக்காமல், மிகப் பொறுமை[illegible]ன் சகித்துக்கொள்ளவேண்[illegible]ம். தெய்வ அருளால் அது சுகமாகும். சுகமாகாவிட்டாலும் அதைச்சகிக்க கடவுள நமக்குப் போதிய சக்தியைத் தருவார். எப்படியும் அவரை மறக்காமல் இருப்பதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்...."

இதைப் படித்ததும் ஒரு நண்பர் ஏதோ மாத்திரை கொண்டு வந்தார். 5நிமிஷத்தில் வலியும் நின்றது. பேனவை எடுத்து விட்டேன்.

---

## உங்கள் தினப்பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யம், நிம்மதி.

பூரம்: இனசன கொண்டாட்டம், செலவு.

உத்தரம்: தொழிற் பலிதம், பணவரவு.

அத்தம்:தொழிற்தடை, சோர்வு

சித்திரை: தொழில்விருத்தி, நிம்மதி.

சுவாதி: தொழில் மேன்மை, பணவரவு

விசாகம்: தேகநலக்குறைவு, கவலைகள்.

அனுஷம்: நண்பருதவி, பணவரவு

கேட்டை: அவப்பொழுது போக்கல், கஷ்டம்.

மூலம்: தொழில் மேன்மை, பணவரவு.

பூராடம்: பகைவராற்கஷ்டம், பணமுடை.

உத்தராடம்: தெய்வவழிபாடு, சுகம்.

திருவோணம்: சமூக எதிர்ப்பு, மனக்கவலை.

அவிட்டம்: தொழில்விருத்தி, மகிழ்ச்சி.

சதயம்: தொழில் நன்மை, இலாபம்.

பூரட்டாதி: தாயாதிகளாற் கஷ்டம், கவலை.

உத்தரட்டாதி : பெரியோர் நேசம்: பணவரவு.

ரேவதி: கடன, மனப்பயம்.

கொழும்புத்துறையில்

# கர்ப்பவதிகளுக்கு அனுமதி மறுப்பு?

## பிரசவ விடுதிபற்றி விசாரணை நடத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்புத்துறை பிரசவ விடுதியில் கடந்த சில தினங்களாக கர்ப்பவதிகளை அனுமதிப்பதில் அனுமதி மறுக்கப்படுவதாக யாழ்ப்பாண மேயருக்கும், சுகாதார வைத்திய அதிகாரிக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக கொழும்புத்துறை சனசமூக நிலையக் காரியதரிசி, மேயர், சுகாதார வைத்திய அதிகாரி இவர்களுக்கு இன்று கடுகதி தபால் சேவைமூலம் புகாரொன்றைச் செய்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:-

கொழும்புத்துறை பிரசவ விடுதியில் கர்ப்பவதிகளை அனுமதிப்பதில் அங்குள்ள தாதிமார். அனுமதிதர கடந்த சில தினங்களாக மறுத்து வருகின்றனர்.

கடந்த இரவு தொழிலாளியான ஒரு கர்ப்பவதி பிரசவத்திற்காக அங்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனல் அங்கு பொறுப்பாக இருந்த தாதி அனுமதிக்க மறுத்து விட்டார். உடனடியாக அக்கர்ப்பவதி ஈச்சமோட்டை பிரசவ விடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் பிரசவித்தார்."

இப்படியான விஷயம் பற்றி ஓர் விசாரணை வைத்து எதிர்காலத்தில் இம்மாதிரி நடைபெருமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் இலவச விட்டமின் குளிசைகள்

## சுகாதார இலாகா முடிவு

கொழும்பு, வியாழன்

தாய்மாருக்கும், தேவைப்படும் குழந்தைகளுக்கும் இலவசமாக விட்டமின் குளிசைகள் கொடுப்பதென சுகாதார சேவை இலாகா முடிவு செய்துள்ளது.

நாட்டிலுள்ள ஆ... கள், வைத்திய நி... மூலமாக, விட்டமின் ...பாதாக் குறைவாகக் காண...படும் தாய்மாருக்கும், ...தைகளுக்கும் இலவசமா... சுமார் நாற்பது லட்சம் ...டமின் குளிசைகள் விநியோ...கிப்பது என சுகாதார சேவை இலாகா முடிவு செய்துள்ளது.

இதுபற்றி சுகாதார சேவை இலாகாவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவிக்கையில், நாட்டில் ஏராளமான தாய்மார்களும், குழந்தைகளும் விட்டமின் பற்றுக்குறையுள்ளவர்களாகக் காணப்படுகிறார்களென்றும், அவர்களுக்குத் தேவைப்படும் விட்டமின் குளிசைகளை பணம் கொடுத்து வாங்க வசதியற்றவர்களாக இருக்கிறார்களென்றும் கூறினர்.

இவர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு இலவசமாக விட்டமின் குளிசைகள் வழங்கப்படுமெனவும் அந்த அதிகாரி மேலும் கூறினர்.

---

### வவனியா கிழக்கு ப. நோ. கூ. சங்கக் கூட்டம்

வவனியா, வியாழன்

வவனியா கிழக்குப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கூட்டம் அதன் தலைவர் திரு. நீ. அந்தோனிப்பிள்ளையின் தலைமையில் நடைபெறறது. இவ்வருஷ நெல் கொள்வனவு பற்றியும், புதிய நெற்காணி அறுவடை செய்வோரின் விஷயமாகவும் ஆலோசிக்கப்பட்டதுடன் கூடிய விரைவில் கூட்டுறவு ஆணையாளரை நெல் கொள்வனவுஅறிக்கையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. கடைசியில் பொதுமக்களால் வேண்டப்படும் சாமான்கள் பழுதாக இருப்பதாகத் தனக்கு வந்த முறைப்பாடுகளைத் தான் கவனித்து தக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தலைவர் தெரிவித்தார்.

### உதவித் திட்ட ஸ்தாபன புதிய தலைவர்

#### இலங்கை விஜயம்

கொழும்பு, பெப். 22

இலங்கையிலுள்ள அமெரிக்க உதவித் திட்ட ஸ்தாபனத்தின் புதிய தலைவர் திரு. ஜாக் பெனற் நேற்று மாலை இலங்கை வந்து சேர்ந்தார்.

சர்வதேச பொருளாதார விவகாரங்களிலும்,நிதித் துறையிலும் நீண்ட காலம் தொடர்புள்ள திரு. பெனற் ஜனவரி மாதம் 10-ந் திகதி சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனத்தின் (ஏ. ஐ. டி.) இலங்கைப் பிரிவின் தலைவராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

திரு. பெனற் அண்மையில் சர்வதேச ஒத்துழைப்பு நிர்வாக ஸ்தாபனத்தின் அண்மைக் கிழக்கு, தென் ஆசிய பிரதேசப் பிரிவின் தலைவராக ஒன்றரை வருட காலம் பணியாற்றியுள்ளார்.

திரு பெனற் அமெரிக்க அரசாங்கநிதி இலாகாவில்இருபது வருட காலம் பணியாற்றியுள்ளார். இரண்டாவது உலக மகா யுத்தத்தை தொடர்ந்த நான்கு ஆண்டு காலத்தில் ஜெர்மனியில் இருந்த அமெரிக்க மிலிட்டரி கவர்னரின் நிதி ஆலோசகராகவும் அவர் பணியாற்றினர்.

### இளந்தாரகை வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் உள்ள இளந்தாரகை கோஷ்டிக்கும் கலைமகள் கோஷ்டிக்கும் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், இளந்தாரகைக் கோஷ்டி 208 ஓட்டங்களும் கலைமகள் கோஷ்டி 53 ஓட்டங்களும் பெற்று இளந்தாரகைக் கோஷ்டி 155 ஓட்டங்களாலும் ஒரு இன்னிங்சாலும் வெற்றி பெற்றது.

தி. விஜயகலிங்கம் 101 ஓட்டங்களும் க. சூரியகுமார் 70 ஓட்டங்களும் பெற்றனர். கணேஷ் திறமையான முறையில் பந்து வீசினர். சி. இ. சிங்கம் மத்தியஸ்தராக இருந்தார்.

# சாராயத் தவறணை நடத்த அனுமதி தருக!

## கலாச்சார மந்திரிக்கு நகரசபை கோரிக்கை

பண்டாரவளை, வியாழன்

'சட்ட விரோதமாகத் தயாரிக்கப்படும் மது பானங்கள் நகரின் பல இடங்களிலும் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. இதனல் நகரின் நல்ல பெயர் கூட மங்கிவிட்டது' என்று திரு. கே. ஐ. ஜமால்டீன் பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்ட விரோதமாகத் தயாரிக்கப்படும் மது பானங்களை ஒழிக்கும் முகமாக, எல்லா வெளிநாட்டு தவறணைகளிலும், முதல்தர இரண்டாம்தர ஹோட்டல்களிலும் சாராயம் விற்பனை செய்ய கைத்தொழில் வீடமைப்பு கலாச்சார மந்திரியிடம் அனுமதிகோரி தீர்மானமொன்றைக் கொண்டுவரும் பொழுதுதான் திரு. ஜமால்டீன் மேற்கண்டவாறு கூறினர். பண்டாரவளை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது.

திரு. ஜமால்டீன் மேலும் பேசியதாவது:-

"நகரில் சாராயத் தவறணை எதுவும் இல்லாததால், மது பானம் அருந்துபவர்கள் சட்ட விரோதமாகத் தயாரிக்கப்படும் மது பானங்களை நாடிச் செல்கின்றனர். சாராயத்தின் விலையைக் குறைத்து, நாட்டிலுள்ள தவறணைகள் எல்லாவற்றிலும் சாராயம் விற்பனை செய்ய அரசாங்கம் ஒழுங்குகள் செய்யாவிடில் சட்ட விரோத மது பானங்களை எந்த வகையிலும் முறியடிக்க முடியாது. நகரில் கள்ளுத் தவறணை திறக்க அனுமதியளிக்கப்பட வேண்டும்."

---

### உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சீடில்ஸ் ஸ்தாபன டைரக்டரும், சங்கானைப் பட்டினசபை அங்கத்தவருமான திரு. ஏ. கே. அழகசுந்தரம் சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக சுகாதார அமைச்சினல் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை, வியாயன்

ஊர்காவற்றுறை பட்டின சபையின் புதிய தலைவரான திரு. பி. இம்மானுவல் ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

### நிர்வாகிகள் தெரிவு

மாவிட்டபுரம், புதன்

ஏழாலை மத்திய வாலிப முன்னேற்றச்சங்க இவ்வாண்டிற்குரிய அங்கத்தவர்களாக கீழ்க் கண்டோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு க. துரைராசா உப தலைவர்: திரு. க. சிவலிங்கம். காரியதரிசி: திரு. சு. தனபாலசிங்கம். உப காரியதரிசி. திரு. க. தங்கராசா. தனதிகாரி: திரு. த. சோமசுந்தரம்

# கிராமப்புறங்களில் நோய்தடுப்பு நடவடிக்கை

## கிராம சேவகர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்

கொழும்பு, வியாழன்

கிராமப் புறங்களில் நோய் பரவா வண்ணம் தகுந்த நடவடிக்கை எடுப்பதே கிராம சேவகர்களின் வேலையாக இருக்கும். இதற்கான பயிற்சி, இனிமேல் தேர்தெடுக்கப்படும் கிராம சேவகர்களுக்கு அளிக்கப்படும். இந்த ஏற்பாட்டை, சுகாதார சேவை இலாகா, கைத்தொழில், வீடமைப்பு, கலாச்சார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியுடன் செய்துள்ளது.

பயிற்சிக் கால நிகழ்ச்சிகளை சுகாதார இலாகாவின் சுகாதார கல்விப் பகுதி தயாரித்துள்ளது. சுகாதார சேவையின் சுப்பிரிண்டன், கிராம சேவகர்களுக்கு விரிவுரைகளை ஆற்றுவார்.

# உரும்பிராய் கொலை வழக்கில் கார்ச்சாரதி சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

உரும்பிராய் கொலை வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கில் கடந்த 1961ம் ஆண்டு நவம்பர் 23-ம் தேதி கதிர்வேலு கந்தசாமி என்பவர் உரும்பிராயைச் சேர்ந்த கட்டையர் வைத்தி என்பவரை கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாய்க் குற்றஞ் சாட்டப்பட்டது.

கார்ச் சாரதியான பி. ஞானப்பிரகாசம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"பிற்பகல் 12-30 அல்லது 1 மணிக்கு எனது காரை யாழ்ப்பாணத்திலிருந்து உரும்பிராய்க்குச் செலுத்திக்கொண்டிருந்தேன். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நான் வந்தபோது ஒருவர் கீழே விழுவதையும், எதிரி வடக்கு நோக்கி ஓட்டம் பிடிப்பதையும் கண்டேன். எதிரியைக் கடந்து நான் உரும்பிராயிலுள்ள என் வீட்டிற்குச் சென்றேன். வீட்டிலுள்ளவர்களுக்கு இச்சம்பவத்தைப்பற்றிக் கூறினேன். இரவு 8 மணிக்கு பொலிசார் வந்து என் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தனர்."

வி. சிவராஜபதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நன்னித்தம்பி பிற்பகல் 1 மணிக்கு என் வீட்டுக்கு வந்து கந்தசாமி எனது தந்தையை வெட்டிவிட்டதாயும், உரும்பிராய் பிள்ளையார் கோவிலுக்கருகில் அவர் விழுந்துகிடப்பதாயும் கூறினர். இருவரும் வந்து பார்த்தபோது என் தந்தை இறந்து கிடந்தார். பொலிசார் என் வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர்."


வழக்கு மார்ச் 14-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

---

### சனசமூக நிலைய கூட்டம்

வவனியா, வியாழன்

"இன்று நாடும் நாமும் முன்னேறவேண்டுமாயின் நாம் எவ்வித பாகுபாடுமின்றி எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற பரந்த நோக்கத்துடன் செயலாற்றவேண்டும். அரசாங்கத்தின் சர்வாதிகாரப் போக்குக்குக் கண்டனம் தெரிவித்தும் எமது வேண்டுகோள் அங்கு ஏற்கப்படும் நிலையில் இல்லை." என புதுக்குடியிருப்பு சனசமூகநிலையக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் வவனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரம் கூறினர்.



பெல்ஜியன்

முள்ளுக் கம்பி

$12\frac{1}{2}$ & 14 அளவு

ஒவ்வொரு கன அங்குலத்துக்கும் 45 தொன் வித அளவுக்கு இதை முள்ளுக்கம்பி நீட்டி இழுக்கக் கூடியது.

லாபமான விலைக்குக் கிடைக்கும் எமது முள்ளுக்கம்பி சகல விதமான வேலியடைப்புக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

கூ. மொ. வி. தாபனம் கடினப்பொருள் இலாகா

40, மக்கலம் வீதி, கொழும்பு-10.

கூ. மொ. வி. தாபனத்துசில்லறைக் கடைகள் எல்லாவற்றிலும் கிடைக்கும். CAS/HW/322

## விளையாட்டு போட்டிகள்

மாவிட்டபுரம், புதன்
தையிட்டி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் கலட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்திற்கும் தையிட்டி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக 'பி' பிரிவு கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தையிட்டி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் முதல் இரு ஆட்டங்களிலும் 15—8, 15—11 புள்ளிகளால் வென்றது.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலுள்ள இல்லங்களான இளங்கோ இல்லத்திற்கும் வள்ளுவர் இல்லத்திற்குமிடையே நடேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளங்கோ இல்லம் 2—0 ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக்கழகத்திற்கும் பீச்லண்ட் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே தையிட்டி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக ஆதரவின் கீழ் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் பீச்லண்ட் 2—1 ஆட்டங்களால் ரேயலை வென்றது.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் இல்லங்களிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பாரதியில்லம் 2—1 ஆட்டங்களால் கம்பர் இல்லத்தை தோற்கடித்தது.

தையிட்டி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக ஆதரவின் கீழ் உடுவில் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் தெல்லிப்பழை யுனைட்டட் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் ஸ்ரார் 2 — 1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

விமன்காமம் பீடிப் பீடிசுக் கழக இல்லங்களிடையே நடந்த கிரிக்கட் போட்டியில் நாவலர் இல்லம் ஒரு இன்னிங்ஸ் 11 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வெள்ளி, 23-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பாலைக்கதிர், 7-30 திரை இசை, 7-45 சரோஜினி தனபாலசிங்கம்—பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-பிறந்ததின வாழ்த்துக்கள், 6-15 பாங்கு, 6-45 வீணை.

இரவு 7-00 கோவில் அஞ்சல், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 ஜி. பழனிவேல்—பாட்டு,

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 இசைக் கோலை—நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சந்தியாவந்தனம் ஸ்ரீநிவாசராவ்—பாட்டு, 9-15 பலகணி, 9-30 மெல்லி
சைக் கதம்பம், 9-45 இசை மாலை.

## கையாலும் பொல்லுகளாலும் தாக்கினராம்

### எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், வியாழன்
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தசாமி இராசசுந்தரம், மானிப்பாயைச் சேர்ந்த நாகலிங்கம் சிவபாதசுந்தரம், உடுவிலைச் சேர்ந்த மாணிக்கர் செல்லத்துரை ஆகிய மூவரும் உடுவிலைச் சேர்ந்த தம்பிமுத்து மார்க்கண்டு, மார்க்கண்டு சற்குணதேவன், மார்க்கண்டு மகாதேவன் ஆயோரை பொல்லுகளாலும் கையாலும் தாக்கிக் காயம் விளைவித்ததாகக் குற்றஞ் சாட்டி சுன்னாகம் பொலிசாரல் மல்லாகம் நீதிபதி திரு. வெள்ளி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்சல் செய்யப்பட்ட வழக்கில் 18 வயதான செல்வி கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "எனது அக்காவின் கணவன் இவ்வழக்கில் முதலாவது எதிரியாகும். இவ்வழக்கில் வழக்காளியாகவுள்ள சற்குணதேவனை சம்பவம் நடைபெறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன் தெரியும். நானும் சற்குணதேவனும் சிநேகிதர்கள். நாங்கள் வேலைத் தலத்திற்குச் செல்லும்போது ஒன்ருகச் செல்வோம்.

சென்ற ஜுலை மாதம் 20-ந் திகதி நானும் சற்குணதேவனும் ஒன்ருகக் கொடிகாமத்திற்குச் சென்றேம். அன்றிரவு ஒரு வீட்டில் இரவைக் கழித்தோம் அடுத்த நாள் சூராவளைக்கு (ஒரு இடம்) சென்றேம். அங்கு பல வீடுகளில் நாங்கள் தங்கியிருந்தோம். பின்னர் சற்குண தேவனின் வீட்டிற்குச் சென்றேம். அங்கு ஜுலை 26 தொடக்கம் 29 வரை இருவரும் கணவன்-மனைவியாக இல்லறம் நடத்தினேம்.

பின்னர் சற்குணதேவனுக்கு ஓர் நிரந்தர மனைவியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இதனுல் நான் மனம் வெறுப்புற்று எனது வீட்டிற்குச் செல்ல முயற்சி செய்தேன. இதனை அறிந்த சற்குணதேவன் என்னைத் தடுத்து நிறுத்தி விட்டார். 29-ந் திகதி இரவு நான் தங்கியிருந்த வீட்டிற்கு எனது அக்காவின் கணவரும் மற்றும் சிலரும் வந்தார்கள். நான அவர்களுடன் சென்று விட்டேன்."

தம்பிமுத்து மார்க்ககண்டு சாட்சியமளிக்கையில் "சம்பவம் நடைபெற்ற தினத்தன்று மூன்று எதிரிகளும் எனது வீட்டிற்கு வந்து என்னையும், சற்குணதேவனையும், மகாதேவனையும் பொல்லுகளால் தாக்கினூர்கள். பின்னர் எனது வீட்டில் இருந்த பரமேஸ்வரியையும் கடத்திச் சென்றுவிட்டார்கள்" என்ருர்.

சாட்சியங்கள் எதிரிகள் மேலுள்ள ஆற்றச்சாட்டுக்களை ஊர்ஜிதம் செய்யாமையால் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

## மோசடி செய்ததாக வழக்கு

யாழ்ப்பாணம், புதன்
என். கற்பகம் என்பவருக்குச் சொந்தமான ரூபா 169 ஐயும், எஸ். பூபதி என்பவருக்குச் சொந்தமான ரூபா 163 ஐயும், வி. மார்க்கண்டு என்பவருக்குச் சொந்தமான ரூபா 150 ஐயும் மோசடி செய்ததாக யாழ்ப்பாணம் பிரௌன் வீதியைச் சேர்ந்த சுப்பையா அருமைநாயகம், கொக்குவிலைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை மயில்வாகனம் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில், யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் எதிரிகளை தலா ரூபா 300 பிணையில் விடுதலை செய்தார். மார்ச் 14-ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# ஆஸ்பத்திரிக்கு தேவையான இரும்புச்சத்து 'டொனிக்'

## வடிகால் வழியாக விரயமாகிறது

கொழும்பு, வியாழன்
கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் பற்ருக் குறைவாகக் காணப்படும் இரும்புச் சத்து 'டொனிக்' மட்டக்களப்பிலுள்ள சிவில் வைத்திய ஸ்டோரிலுள்ள வடிகால் வழியாக வழிந்தோடுகிறது!

மட்டக்குளியாவிலுள்ள வைத்திய ஸ்டோரில், ஆயிரத்துக்குமதிகமான இரும்புச் சத்து 'டொனிக்' போத்தல்கள் பழுதடைந்ததன் விளைவாக, 'டொனிக்' வடிகால் வழியாக வழிந்தோடிக்கொண்டிருக்கிறது.

இதுபற்றி சிவில் வைத்திய ஸ்டோரைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், இரும்புச் சத்து 'டொனிக்' போத்தல்களுக்கு பாதுகாப்பாக, பிளாஸ்டிக் மூடிகள் இருந்ததென்றும், சூட்டின் காரணமாக பிளாஸ்டிக் மூடிகள் விரிவடைந்து 'டொனிக்' பொங்கி வழிந்துவிட்டதென்றும் கூறினர்.

## விசர் நாய்களை அடித்துக் கொல்ல பட்டினசபை முடிவு

ஊர்காவற்றுறை, வியாழன்
விசர் நாய்கள் அதிகரித்திருப்பதை முன்னிட்டு அவற்றைத் துப்பாக்கியினல் சுட்டுக் கொல்வதற்காக ஊர்காவற்றுறை பட்டின சபை, பொலிசாரிடம் அனுமதி கோரியிருந்தது. ஆனல் அவசரகாலத்தின் போது, பொலிஸாரிடம் கொடுக்கப்பட்ட துப்பாக்கிகள் உரியவர்களிடம் இன்னும் திருப்பிக் கொடுக்கப்படாததால் பட்டின சபையின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது

நாய் பிடிக்கும் கரத்தையைத் தங்களுக்குத் தந்துதவும்படி, யாழ்ப்பாண மாநகர சபைக்கு பட்டின சபை விண்ணப்பித்திருந்தது. ஆனல் இதிலும் அதற்குத் தோல்விதான் கிடைத்தது. இறுதியில் இரு தொழிலாளர்களை நியமித்து விசர் நாய்களை சாக்குகளில் பிடித்து அவற்றை அடித்துக் கொல்லும்படி உத்தரவிட வேண்டும் என பட்டின சபை முடிவு செய்துள்ளது.

## பட்டினசபைக்கூட்டம்

காங்கேசன்துறை, வியாழன்
காங்கேசன்துறைப் பட்டின சபையின் மாதாந்தக்கூட்டத்தில் திரு. த. கனகசபை உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

"அரசினர் உதவிபெறும் பாடசாலைகள் முடிக்குரியதாக மாற்றப்படும்சமயத்தில் அப்பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் தொடர்ந்து முன்போல் அரசியல் உரிமைகள் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று இச்சபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது" என்னும் தீர்மானம் நிறைவேறியது.

நாலாம் வட்டாரத்திலுள்ள சனசமூக நிலையத்தைப் பட்டின சபை எடுத்து நடத்தவேண்டும் என்பதுபற்றியும் சபையில் ஆலோசிக்கப்பட்டது.




உங்கள் குடும்பத்துக்கே ஏற்றது




குழந்தைகள் ஸல்லை கடைசித் துளிவரை விடாமல் பருகுகிருர்கள். ஏனென்ருல் அதன் பாலாடையின் மிகுந்த தித்திப்பு சுவையை அவர்கள் விரும்புகிருர்கள்!
பெரியவர்களும் கூட ஸல்லைப் பெரிதும் விரும்புகிருர்கள். அவர்கள் அதை வெறும் பால் பானமாகப் பருகுகிருர்கள் அல்லது பாலுக்குப் பதில் டீயுடனே, கோப்பியுடனே, சேர்த்து அருந்துகிருர்கள்.
உங்கள் குடும்பத்தில் ஸல்லை தினசரி உபயோகிக்கக்கூடியவாறு அது விலை மலிவானது. மேலும், அது பாலுக்கும் சீனிக்கும் செலவாகும் பணத்தை மிச்சப்படுத்துகிறது. அது கொஞ்சம்கூடத் தங்காமல் உடன் கரைந்து விடுவதால் துளியும் வீணவதில்லை.
உங்கள் குடும்பத்துக்கு ஸல்லை அளியுங்கள், அது சிக்கனமான மிகச் சிறந்த பானம்!

ஸல்
உடன் கரையும் மோல்டட் பால்
குடும்பத்தார் உடன் விரும்புவது

—ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படுவது

(WT/HLS 2993

# கைதடி கொலைவழக்கில்

## 3 எதிரிகளுக்கு சிறை

### 2-ம் 4-ம் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

கைதடி கொலை வழக்கில் முதல் எதிரிக்கு 2 வருட கடுழியச் சிறையும் மூன்ருவது எதிரிக்கு ஏழரை வருட கடுழியச் சிறையும் ஐந்தாவது எதிரிக்கு 6 மாதக் கடுழியச் சிறையும் விதித்து நீதியரசர் டாக்டர் எக். டபிள்யு. தம்மையாகியு. ஸி.நேற்று தீர்ப்பளித்தார். இரண்டாம் நான்காம் எதிரிகளை அவர் விடுதலை செய்தார்.

சுப்பர் கந்தனுக்கு காயம் விளைக்கும் நோக்கத்துடன் சட்டவிரோதமாகக் கூடியதாகவும் ஆபத்தான ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் சுப்பர் கந்தனை கொலைசெய்ததாகவும் குற்றஞ்சாட்டி நாகன் சின்னப்பொடியன், நாகன் சின்னவன், சின்னப்பொடியன் சுப்பர், சுப்பர் வல்லி, முருகன் மார்க்கண்டு ஆகிய ஐவர் மீதும் தொடரப்பட்ட இவ் வழக்கு வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு தம்பையா கியு. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிராசிக்கியூஷன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானர். திருவாளர்கள் வி. நடராஜா, எஸ். கே. திரவியநாயகம் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம், திரு கே ஜெகநாதனுடன் எதிரிகள் சார்பில் ஆஜரானர்.

கைதடியில் வசிக்கும் கா[illegible] சென்ற கந்தனின் [illegible]னவி பொன்னி சாட்சி[illegible]ளிக்கையில் பின்வருமா[illegible] தெரிவித்தார்.

சம்பவம் [illegible]டைபெற்றதினத்தன்று பிற்பகல் நானும் எனது கணவனும் பசளை தெளிப்பதற்காக வயலுக்குச் சென்றோம் பசளை போட்டுக் கொண்டிருந்த கொஞ்ச நேரத்தில் சீக்காய் அடித்த ஒலித கேட்டது. நான் நிமிர்ந்து பார்த்தேன். ஐந்து எதிரிகளும் ஓடிவருவதைப் பார்த்தேன். அவர்களை எனக்குத் தெரியும். முதல் எதிரி கையில் ஒரு வாள் வைத்திருந்தார். இரண்டாவது எதிரியின் கையில் ஒரு கோடரியும் மூன்ருவது எதிரியின் கையிலும் ஒரு கோடரியும் நான்காவது எதிரியின் கையில் ஒரு பொல்லும் ஐந்தாவது எதிரியின் கையில் ஒரு போத்தலும் இருந்தன. எதிரிகள் எங்களுக்குக் கிட்டவந்ததும் நாங்கள் பின்னுல் சென்ளேம்.

#### கையெடுத்துக் கும்பிட்டேன்

நான் எனது இரு கைகளையும் உயர்த்தி எங்களை அடிக்க வேண்டாம் என்று எதிரிகளைப் பார்த்துக் கும்பிட்டேன்.

நாகன் சின்னப்பொடியன் எனது கணவனின் காலில் வெட்டினுர். அவர் கீழே விழுந்தார். மற்ற நான்கு எதிரிகளும் அவரை அடிக்கத் தொடங்கினர். நான் கூச்சலிட்டேன். சுப்பர் வல்லி, "நீ ஏனடி இங்கே வந்தாய்?" என்று கேட்டபடி என் தலையில் அடிக்க ஓங்கினர் நான் கையைக் கொடுத்து தடுத்தேன். அந்த அடி கையில் விழுந்தது. பின்னர் எதிரிகள் நாகன் சின்னப் பொடியனின் வீட்டுக்குள் ஓடினர்.

சாட்சியை வழக்கறிஞர் திரு. கணேசலிங்கம் குறுக்கு விசாரணை செய்தார்.

டாக்டர்களும் கிராமத் தலைமைக்காரரும் சாட்சியமளித்த பின் சாதாரண காயமுண்டு பண்ணிய குற்றத்தை முதல் எதிரி ஒப்புக்கொண்டார். கொலை செய்யும் நோக்கமில்லாது கைமோசக் கொலை புரிந்த குற்றத்தை மூன்ருவது எதிரி ஒப்புக்கொண்டார். சிறு காயமேற்படுத்திய குற்றத்தை ஐந்தாவதுஎதிரி ஒப்புக்கொண்டார்.

2-ம், 4-ம் எதிரிகள் மீதுள்ள குற்றச்சாட்டுக்களை முடிக்குரிய வழக்கறிஞர் வாபஸ் பெற்ருர்.

முதல் எதிரிக்கு இரண்டு வருடக் கடுங்காவல் சிறையும் மூன்ருவது எதிரிக்கு ஏழரை வருட கடுங்காவல்சிறையும்ஐந்தாவது எதிரிக்கு 6 மாதக் கடுங் காவல் சிறையும் விதித்துத் தீர்ப்பளித்த நீதியரசர் 2-ம், 4-ம் எதிரிகளை விடுதலை செய்தார்.

## ஐ. ஜி. பி. யின்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யபட்டது. 'கலட்' அதிப்காரிகளுக்கு நேரடியாக உத்தரவுகள் பிறப்பிக்கும்படி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திஸ்ஸநாயக்காவைக் கேட்டிருந்தார்.

(ஈ) இதன்படி சகல நடவடிக்கைகளையும் எடுத்தபின் அவர் அன்றிரவு அவர் (திஸ்ஸநாயக்கா) நித்திரைக்குச் சென்ருர்.

#### பத்திரிகைகள் கூட அனுமதிக்கப்படவில்லை

திரு. ஜே. ஆர்.ஜயவர்த்தனவின் அறிக்கை மேலும் பின்வருமாறு கூறியதாவது.–

1962-ம் ஆண்டு ஜனவரி 30-ந் திகதி திரு. திஸ்ஸநாயக்கா எழுத்துமூலம் ஆலோசனைச்சபைக்கு விண்ணப்பித்திருந்தும் அதற்கு எவ்விதபயனும் கிடைக்கவில்லை. இதற்கு மாருக சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கைகளை இறுக்கத் தொடங்கினர். ஜனவரி 30-ந் திகதி தொடக்கம் வெளியிலிருந்து உணவு, உடை, செய்திப் பத்திரிகைகள் எவற்றுக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. சிறைச்சாலை நூல்நிலையத்தினுள் சஞ்சிகைகளையும் புத்தகங்களையும் வாசிக்கமட்டும் அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

#### கோரிக்கைகள் பயனளிக்கவில்லை

காரணமின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது சம்பந்தமாக பிரதம மந்திரிக்கும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனரலுக்கும், நீதிமந்திரிக்கும், நிதிமந்திரிக்கும் அவர் (திஸ்ஸநாயக்கா) பலமுறை வேண்டுகோள் விடுத்தார். ஆனல் பயன் கிடைக்கவில்லை.

கட்டுப்பாடுகள் அதிகரித்தன. வழிபாட்டுப்புத்தகங்களைப் பார்க்கவும் சற்பிரசாதம் பெறவும் அவர் அனுமதிக்கப்படவில்லை. அவர் தனியாக அடைத்துவைக்கப்பட்டார்.

7-2-62-ல் அவர் 'டெம்பிள் ட்ரீஸ்'க்குச் எடுத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டார். அங்கு அவரது வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட அவரது வாக்குமூலம் திரு. அம்பலவாணரால் திருப்பி வாசிக்கப் பட்டபொழுது, பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெரலுக்கும்; திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவும் வருமாறு அவர் (திஸ்ஸநாயக்கா, அழைப்பு அனுப்பினர்.

திரு பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா அறைக்குள் வந்து திரு. அம்பலவாணரைவெளியே அனுப்பினர்.

தன்னைத் தடுப்புக்காவலில் வைத்திருப்பதன் காரணமென்ன? எவ்வளவு காலத்துக்கு தடுப்புக்காவலில் வைத்திருக்கப்படும்? என்று திரு. திஸ்ஸநாயக்கா கேட்டார்.

இதற்கு திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா பதிலளிக்கையில், "மிகவிரைவில் நீங்கள் வெளியில் வந்துவிடுவீர்கள். அதுபற்றி நான் கவனித்துக் கொள்வேன்" என்று கூறினர்.

மிகவிரைவில் என்பதன் அர்த்தம்என்ன? என்ற கேள்விக்கு திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா, "ஒரு வாரத்துக்குள்" என்று பதிலளிதார்.

#### மோசமான நிலைமை

திரு. திஸ்ஸநாயக்கா 'டெம்பிள் ட்ரீஸை' விட்டு வெளியே வருவதற்கு முன் தாம் காவலில் வைக்கப்பட்டிருக்கும் மோசமான நிலைமை பற்றி நீதி அமைசர் சாம். பி. ஸி. பெர்னன்டோவுக்குத் தெரிவித்தார்.

"ஐயோ. கடவுளே! நிலைமை இப்படி இருக்குமென நான் கனவில்கூட நினைக்கவில்லை. இது பற்றி இன்றே கவனித்து ஆவன செய்கிறேன்" என்று நீதி மந்திரி பெர்னன்டோ கூறினராம்.

இதற்குப்பின் முன்னர்அனுப்பப்பட்டுவந்த சஞ்சிகைகள் கூட அவருக்கு அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டது. அவர் (திஸ்ஸநாயக்கா) வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து மருந்துக கிடங்கு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

#### தொந்தரவுகள் அதிகரித்தன

இந்தச் சிறைக்கு மாற்றப்பட்டதன்பின் அவருக்கு மேலும் தொந்தரவுகள் அதிகரித்தன தனியாக அவர் அடைத்து வைக்கப்பட்டதுடன். அவரது அறைக்கு ஒரு ஜெயில்கார்டும், ஒரு சிப்பாயும் அனுப்பப்பட்டனர். ஒவ்வொரு இரண்டுமணி நேரத்துக்கும் சிப்பாய் மாற்றப்பட்டார். ஒவ்வொரு நான்குமணி நேரத்துக்கும் மாற்றப்பட்டார். இதன் விளைவாக நித்திரை கொள்ள முடியாமல் போய்விட்டது. இத்துடன் சிறைக்கதவில் ஒருசங்கிலியும்போடப்பட்டது. இச் சங்கிலிகள் கட்டப்படுவதற்கு அரைமணி நேரமாகும். சிறை அதிகாரிகளுடன் பேசுவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளும் மறுக்கப்பட்டன.

#### குறிப்புப் புத்தகம் எடுக்கப்பட்டது

பல்வேறு விஷயங்களைப் பற்றியும் அவர் (திஸ்ஸநாயக்கா) குறித்துவைத்திருந்த குறிப்புப் புத்தகம் எடுக்கப்பட்டது. பின்னர் அவரிடம்ஒருகுறிப்புப் புத்தகம் காண்பிக்கப்பட்டது. அவர் குறித்து வைத்த பக்கங்களில் ஒவ்றைத்த தவிர மற்றவைகள் இருந்தன. தமது குறிப்புப் புத்தகத்தில்தான் எழுதிய கடிதங்களின் பிரதிகளையும், ஆலோசனைச் சபைக்குத் தாம் சமர்ப்பிக்கவிருப்பவை பற்றியும் குறித்துவைத்திருந்தார்.

இந்தக் குறிப்பு புத்தகம் எடுக்கப்பட்டது பற்றி கைதி திஸ்ஸநாயக்கா மிகவும் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்! ராணுவ அல்லது சிறை அதிகாரிகள் அந்தக் குறிப்புப் புத்தகத்தில் எதையும் சேர்த்து தன்னை சங்கடத்தில் ஆழ்த்திவிடக் கூடுமென்று அவர் தெரிவித்தார்.

தனது மனநிலையைக் குழப்பிவிடும் நோக்கத்துடன் தான் தனக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படருப்பதாக அவர் கருதுகிருர்.

திஸ்ஸநாயக்காவை நேற்றுச் சந்திக்க கூடிய சந்தர்ப்பம் தற்செயலாகக் கிடைத்தது. ஆலோசனைச் சபை முன் ஏற்படக் கிடைத்ததும் சந்தர்ப்பவசம் தான்.

வழக்கறிஞர்களை ஏற்படுத்திக் கொள்ளலாமென்று திஸ்நாயக்காவுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் வழக்கறிஞர்களை ஏற்படுத்துவதற்கு தமது மனைவியுடன் தான் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் அவர் மீண்டும் மீண்டும் கோரியபோதிலும் அவரது கோரிக்கைபுறக்கணிக்கப்பட்டது தனது சார்பில் வழக்கறிஞர்களை ஏறபடுத்தும்படி திருமதி திஸநாயக்காவுக்கு திஸநாயக்கா எழுதிய கடிதம் திருமதி திஸநாயக்காவுக்கு அனுப்பபடவில்லை.

சந்தர்ப்பவசத்தால் தற்செயலாக எங்களுக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அனுமதிபெற்றுவருமாறு திருமதி திஸநாயக்காவை நாங்கள் அமைச்சுக்கு அனுப்பிவைக்காதிருந்தால் திஸநாயக்கா சட்ட உதவியின்றியே ஆலோசனைச் சபை முன்பு ஆஜர்செய்யப்பட்டிருப்பார்.

## யாழ்ப்பாணத்துக்கு..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ரைத் துடைப்பதுதான் எமது கடமையாகும். நாம் பிறருக்கு நன்மை செய்கிறோமென்பதால் தான் சந்தோஷமாக வாழமுடியும்.

கூட்டுறவுச் சமாசத்திற்கு ஒரு கட்டிடத்தை அமைப்பதற்கு வாய்ப்பான காணியைப் பெற்றுத் தருவதில் யாழ்ப்பாண எம். பி. யுடன் சேர்ந்து முயற்சித்து வருகிறேன். இது மிகவிரைவில் கைகூடுமென எதிர்பார்க்கிறேன்.

திரு. தம்பர் நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:-

ஒவ்வொருவரும் இருக்கும் நிலைமை நல்ல நிலமையென்று எண்ணி அமைதிபெற்றுவிடக் கூடாது. கீழான நிலையிலுள்ளவர்கள் கஷ்டத்தைப்பற்றியும் சிந்தித்து அவர்களும் வாழ வழியமைக்கவேண்டும். பதவி உயர்வு தாழ்வுகள் எல்லாம் வந்துபோகும். இதனல் மயங்கிவிடக்கூடாது. இவற்றைப் பயன்படுத்த சிறந்த தொண்டாற்றவேண்டியதே முறையானதாகும்.

கூட்டத்தில் திருவாளர்கள் வி. சி. கனகரத்தினம், அருமைநாயகம், தருமலிங்கம் ஆகியோரும் பேசினா.

தேநீர் விருந்தொன்றும் நடைபெற்றது.


சினிமாஸ் ஸ்தாபனத்தாரின்
மகத்தான வெளியீடு!!

பிளாஸா (வெள்ளவத்தை) | கேபிட்டல் (கொழும்பு)
வெம்பிளி (கண்டி) | விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) | சஹாரா (சிலாபம்)

மனோகர், வீரப்பா,
ஈ. வி. சரோஜா, ராஜசுலோசன
நடித்த




2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 தியேட்டர்களில்
சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி,
எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா,
எம். என். நம்பியார்
நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்) | நாகையா பத்மினி
நடித்த
ஏழைபடும்பாடு


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1962 ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.